காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை



கொழுத்தகிடா மூன்று.....!

மலர் 1 25—10—64 இதழ் 14

கசப்பான உண்மையை எடுத்துக் கூற, மனத் துணிவும் பிரச்சினையிலே தெளிவும் நிரம்ப வேண்டும். அந்த உண்மையை எடுத்துக் கூறுவதனால், சொந்தக் கட்சி நலன் கெட்டுவிடக் கூடுமோ என்ற ஐயப்பாடு எழுந்துவிடும்போது, மூடி மறைத்துவிடலாமா, மென்று விழுங்கிவிடலாமா என்று பலருக்குத் தோன்றும். பழியை வேறு யார் தலைமீதாவது சுமத்தி விடலாமா என்று வேறு சிலர் எண்ணுவதுண்டு. இவ்வித மான போக்கினால், கட்சி நலனைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்—ஒரு சில காலத்துக்கு—ஆனால் நாட்டு நலன் வெகுவாக பாதிக்கப்பட்டுப் போய்விடும்.

அமைச்சர் தாசப்பா அவர்கள் துணிந்து ஒரு கசப்பான உண்மையை எடுத்துக் கூறி இருக்கிறார்—நேரிடையாக அல்ல—வேறோர் தகவலை வெளியிடுவதன் வாயிலாக.

நாட்டைத் தொழில் மயமாக்க வேண்டும்: எதற்கெடுத்தாலும் வெளி நாடுகளின் தயவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது; செய்பொருள்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தபடி இருப்பது நம் நாட்டுச் செல்வத்தைப் பிற நாடுகளுக்குக் கொட்டிக் கொடுத்திடும் கேட்டினை விளைவிக்கும்; நம் நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அற்றுப் போய்விடும்—என்பவைகள் எவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய கருத்துகள்.

அதுபோலவே, வெளிநாடுகளிலிருந்து வரும் செய்பொருள்களுடன் உள்நாட்டிலே தயாரிக்கப்படும் பொருள்களைப் போட்டியிடச் செய்வது வலிவு மிகுந்தானுடன் வளர்ச்சி பெருதவனை மோதவிடுவது போன்றதாகும்; எனவே புதிதாகத் தொழில்கள் துவக்கப்படும் போது, தொழிலிலே மிகுதியும் முன்னேறிவிட்டுள்ள நாடுகளின் போட்டியினால் ஆபத்து ஏற்படாதபடி, பாதுகாப்பு தரப்பட வேண்டும் என்பதும் பொருளாதார நிபுணர்களாலும், அரசியல் விற்பன்னர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கையாகும்.

ஆனால் இந்தப் பாதுகாப்பு, முதலில், தொழில் நடத்தும் முதலாளிகளுக்கே பெருதத இலாபத்தைத் தேடிக் கொடுக்கும்; செய்பொருளை வாங்கிடும் மக்கள் அதிக விலை கொடுக்கிறார்கள், அவர்களுக்குச் சுமை ஏறுகிறது.

இந்தவிதமான பாதுகாப்பு தரப்பட்டே, இந்தியாவின் பல தொழில்கள் வளர்ந்துள்ளன.

வெளிநாடுகளிலிருந்து ஒரு செய்பொருளை வரவழைத்தால், பத்து ரூபாய்க்கு அது மக்களுக்குக் கிடைக்கும் என்றால், அதே பொருளை உள்நாட்டிலே தயாரிப்பவர்களிடம் பதினைந்து ரூபாய் கொடுத்து வாங்கும் நிலை, பொதுமக்களுக்கு ஏற்படுகிறது.

எனவேதான், இந்தப் பாதுகாப்பு அளிக்கும் முறை, முதலாளிகளுக்கு மிகுந்த சுவை தருகிறது;

ஆனால், உண்மையான சமதர்ம நெறியினைக் கடைப்பிடிக்க வேண்டுமானால், படிப்படியாக, மக்கள் மீது ஏற்றப்படும் சுமை குறைக்கப்பட வேண்டும்; முதலாளிகளின் இலாபவேட்டை கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

பாதுகாப்பு பெற்றுவரும் காலம் நீடித்துக் கொண்டே போவது மக்களைத் தொல்லைக்கு ஆளாக்கும்.

பாதுகாப்பு பெற்றுவரும் காலத்தில் முதலாளிகள், தமது தொழிலிலே நேர்த்தியான முறைகளைப் புகுத்தி, உற்பத்தித் திறனை வளரச் செய்வதுடன், உற்பத்திச் செலவைக் கட்டுப்படுத்தி, பிறநாட்டினர் எந்த விலைக்கு அதே பொருளை விற்கிறார்களோ அதே அளவுக்கு அதே பொருளை இங்கே விற்பனைசெய்திடும் கட்டத்தை அடைந்தாக வேண்டும்.

அதுபோலவே பொருளின் தரமும், வெளிநாடுகளிலிருந்து வரும் பொருளின் தரத்துக்கு ஒப்பானதாகவாகிலும் உயர்ந்து வரவேண்டும்.

சமதர்மத்தின் அடிப்படையே, தொழில்கள், முதலாளிகளின் இலாபவேட்டைக் காடாக இருந்திடும் நிலையை மாற்றி அமைத்து, பொதுமக்களின்வாழ்க்கை நலனுக்காகத் தொழில்கள் உள்ளன என்ற நன்னெறியை நடைமுறை ஆக்குவது என்பதாகும்.

இந்த நெறியின்படி இன்றுள்ள காங்கிரஸ் அரசு நடந்துகொண்டுளதா என்ற கேள்விக்கு, காங்கிரசார், ஆவடியையும் புவனேஸ்வரத்தையும் காட்டுகிறார்கள், ஜனநாயக சோஷியலிசம் என்ற எழுத்தாரததைக் காட்டுகிறார்கள். ஆனால், உண்மை என்னவெனில், சமதர்ம நெறியை மறந்து இன்றைய ஆட்சி நடந்து கொள்வதன் காரணமாகத் தொழில் அதிபர்கள், மேலே குறிப்பிட்ட 'பாதுகாப்பு' முறையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு, இலாபவேட்டை நடத்தி பெரும் பொருள் திரட்டி, அதன் துணைகொண்டு, சமதர்மம் பேசும் காங்கிரஸ் கட்சியையும் ஆட்சியையுமே குத்தகைக்கு எடுத்து, கொழுத்து வருகின்றனர்.

என் சட்டைப் பையில் 43 பாராளு மன்ற உறுப்பினர்கள் உள்ளனர் என்று சின்னாட்களுக்கு முன்பு ஒரு முதலாளி பேசினார்—வெளிப்படையாக, அவர் ஓர்

ஏமாளி அல்லது அவசரக்காரர் என்று, அவரைக் காட்டிலும், காங்கிரஸ் கட்சியில் மிகுந்த செல்வாக்கை வைத்துக்கொண்டுள்ள 'சில முதலாளிகள் கருதிக் கொண்டிருந்திருப்பார்கள்.

எந்த முதலாளிக்கு எந்த அளவுக்குச் செல்வாக்கு என்பதிலே வேண்டுமானுல், 'போட்டி இருக்கலாம்; ஆனுல் முதலாளிகளுக்கு காங்கிரஸ் கட்சியிலும் ஆட்சியிலும் மிகுதியான செல்வாக்கு இருக்கிறது என்பதிலே எவருக்கும் ஐயப்பாடு கிடையாது.

வெள்ளைக்காரர் ஆட்சியின்போது இருந்ததைக் காட்டிலும், முதலாளிகளின் செல்வாக்கு அதிக அளவிலும், அச்சம் கூச்சமற்ற தன்மையிலும் இருந்து வருகிறது. வெளிநாட்டு முதலாளிகள்மீது எழுப்பப் படக்கூடிய வெறுப்பினை "தேசிய" முதலாளிகள்மீது கிளப்பிடுவதும் கடினமான காரியமாகிவிட்டிருக்கிறது, காங்கிரசின் பெருந்தலைவர்கள் அவர்களுக்கு அன்பும் ஆதரவும் காட்டும் போக்குடன் இருப்பதனுல்.

இங்கிலையில், தொழில் வளரவேண்டும் என்பதற்காக, வளரும் மலர்ச்செடியை மாடு கன்று பாழாக்கி விடாதபடி சுற்றிலும் முள்வேலி அமைப்பதுபோல, ஏற்படுத்தப்பட்டுள்ள "பாதுகாப்பு" முறையைச் சாதகமாக்கிக்கொண்டு, பொதுமக்கள் தலைமீது பளுவினை ஏற்றி ஏற்றி, முதலாளிகள் தமது இலாபத்தைப் பெருக்கிக்கொண்டுள்ளனர்.

இந்த இலாபமும் வெளிநாட்டுப் பொருள்களைவிட அதிகஅளவு விலை, உள்நாட்டுச் சரக்குகளுக்கு வைப்பதாலே கிடைப்பது மட்டுமல்ல, வெளிநாட்டுப்பொருளைவிட, தரம் குறைந்த பொருளைத் தயாரித்து மக்கள் தலையிலே கட்டுவதன் மூலமாகவும் இலாபத்தைப் பெருக்கடித்துக்கொள்கிருர்கள்.

தத்துவங்களை நீக்கிவிட்டு, பச்சையாக உள்ளது என்ன என்று பார்ப்போமானுல், இன்று மக்கள் அதிக விலைகொடுத்து மட்டச் சரக்குகளை வாங்கி நலிகின்றனர்; பாதுகாப்பு பெற்று, தரத்தைக் குறைத்து உற்பத்தி செய்து முதலாளிகள் பெரும் பொருளைக் குவித்துக்கொள்கின்றனர். ஒரு முதலாளி கூறினுராம், நேரு மறைந்த நேரத்தில், நான் நினைத்தால் :எனக்கு வேண்டிய ஒருவரை பிரதமமந்திரி ஆக்கமுடியும்—செலவுகூட அதிகம் இல்லை — ஒருகோடி ரூபாயை அவிழ்த்துவிட்டால் போதும் என்று.

இங்கிலை இருப்பதனை எதிர்க்கட்சிகள் எடுத்துக் காட்டும்போது காங்கிரசாருக்கு, கோபம் கோபமாக வருகிறது; கண்கள் கொவ்வையாகிவிடுகின்றன; வார்த்தைகள் நாராசக் குண்டுகளாகின்றன.

குற்றச்சாட்டு ஆதாரமற்றது, பொய், என்று விளக்கிடவும், மெய்ப்பிக்கவும் வழி இல்லாதபோது, ஆத்திரம் பிறப்பதும், ஏசித் திரிவதும் இயல்பு; அதனை நம்மால் புரிந்துகொள்ளவும் முடிகிறது.

தொழில்துறை அமைச்சராக உள்ள 'தாசப்பா, உண்மையை மென்று விழுங்கிவிட விரும்புபவராகத் தெரியவில்லை.

மராட்டிய மண்டல வணிகர் கோட்டத்திலே பேருரையாற்றுகையில் — இந்தத் திங்கள் முதற்பகுதியில் — தாசப்பா அவர்கள் சிறிதளவு மனம் திறந்தே பேசிவிட்டிருக்கிருர்.

> இதற்கு முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு, இந்திய தொழிலதிபர்கள் சலுகைகளைப் பெற்றுள்ளனர்.

என்பது அமைச்சரின் வாக்கு. இதிலே உள்ள நாசுக்கினை நீக்கிவிட்டுப் பார்த்தால்,

> முதலாளிகள் கொட்டமடிக்கிருர்கள்

என்று ஆகிறது.

ஏன்? எவரால்? என்ற வினுக்கள் எழுப்பப்படவில்லை. இங்கிலையும், ஜனநாயக சோஷியலிசமும் எப்படிப் பொருந்துகிறது என்பதும் விளக்கப்படவில்லை.

கேள்வி எழுப்பவேண்டியவர்கள் பொதுமக்கள்.

தக்க சமாதானம் கூறிட முற்படவேண்டியது ஆளுங்கட்சியினரின் கடமை — கொள்கைகளை உருவாக்கிடும் பொறுப்பில் உள்ளவர்களைக் குறிப்பிடுகிருேம்—கூடை சுமந்து கூவி விற்றிடும் நிலையினரை அல்ல.

வேறு எப்போதுமே கண்டிராத அளவு சலுகைகளை முதலாளிகள் பெற்றிருப்பதுதான், சோஷியலிசமா!! நினைத்தாலே நடுக்கமெடுக்கிறது. கொழுத்த கிடா மூன்று, வள்ளலார் விழா 'விருந்துக்காக என்று செப்பிடும் விபரீதம்போன்றிருக்கிறது.

தாசப்பா சொன்னதற்கு நாம் வேண்டுமென்றே விபரீதமான பொருளைச் சமைத்துக்கொண்டோம் என்று கூறிட முனைவர், இடம்பிடித்தான்கள். அவர்களுக்கு இதனைக் கூறுவோம்;

> கடந்த பதினைந்து ஆண்டுகளாக, பொதுமக்கள் துளியும் முணுமுணுக்காமல்; அதிக விலைகொடுத்து சரக்குகளை வாங்கி, கஷ்ட நஷ்டத்தை ஏற்றுக்கொண்டனர்; தியாகம் செய்திருக்கின்றனர்.
>
> ஆனுல், இதற்கு ஈடாக, தொழில் துறையினர் விலைகள் குறைந்து தரம் உயர்ந்து உற்பத்தி பெருகியது என்ற நிலையை ஏற்படுத்தாமற் போவார்களானுல், பண்டங்களை வாங்கி உபயோகிப்போரின் நல்லெண்ணம் தொடர்ந்து கிடைத்திடாது.

இந்த விளக்கம், நிலைமையை மிக நன்ருக எடுத்துக் காட்டுவதுடன், எதையாவது பேசி, எதிர்ப்பாளர்களை மடக்கிவிடலாம் என்ற நினைப்பையும் கொறுக்கித் தள்ளுகிறது.

வரிமேல் வரிபோட்டபடி உள்ளனர், அதனுலேயே, உற்பத்திச் செலவு அதிகமாகிறது. விலை ஏறிவிடுகிறது —இது வெல்வெட்டு மெத்தைக்காரர்கள் விருப்பத்துடன் கூறிடும் வாதம். விவரமறியாதவர்கள், உண்மைதான் என்று கூறிடக் கூடியநிலையை ஏற்படுத்திவிடும் வாதம். தாசப்பா அதனையும் வீழ்த்துகிருர்,

> வரியினுல் ஏற்படும் விளைவுகள் ஒருபுறம் இருப்பினும், உற்பத்திச் செலவைக் குறைக்க நிரம்ப வழி இருக்கிறது;

என்று கூறி இருக்கிருர்.

இதனை எடுத்துக் கூறியதன் மூலம் தாசப்பா அவர்கள், மற்றோர் உண்மையை, நாம் உணர்ந்து கொள்ள வழி அமைததிருக்கிருர்.

> பதினைந்து ஆண்டுகளாக பொதுமக்கள் தலையிலே பளு ஏறியபடி இருக்கிறது.
>
> பாதுகாப்பு பெற்று முதலாளிகள் பெருத்த இலாபம் குவித்திருக்கிருர்கள்.
>
> இதுவரையில் கிடைத்திராத சலுகைகள் இப்போது இங்கு முதலாளிகளுக்குக் கிடைத்திருக்கின்றன.

என்றாலும் விலை குறையவில்லை, தரம் உயரவில்லை.

இத்தகைய தெளிவும் துணிவும் கொண்டவராகத் தெரிகிறார் தாசப்பா, ஆனால், முறையை மாற்றிட என்ன செய்யப் போகிறார்! தெரியவில்லை; கூறிடக் காணோம்.

முறையை மாற்றிட வல்லவர்களும் உரிமை பெற்றவர்களுமான பொதுமக்கள், இதனைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஜனநாயக சோஷியலிசம் பேசும் காங்கிரசின் ஆட்சியிலேதான், முதலாளிகள் வேறு எப்போதும் இல்லாத அளவுக்குக் கொழுத்திருக்கிறார்கள்; கொட்டமடிக்கிறார்கள்.

காங்கிரஸ் தொண்டர்கள் தூக்கிடும் கொடியிலே பொறிக்கப்பட்டிருக்கிறது ஜனநாயக சோஷியலிசம் எனும் சுவைமிக்க இலட்சியம். ஆனால் கொற்றம் இன்று முதலாளிகளின் கோட்டைக்குக் காவல் வேலை பார்த்து நிற்கிறது.

இதனையும் தாசப்பா அவர்கள் விளக்கிடுவார் என்று எதிர்பார்த்திட முடியுமா—அவரோ டில்லியில் கொலுவிருக்கும் காங்கிரஸ் அமைச்சர்.

இந்த அளவுக்கேனும் பேசினாரே! மகிழ்ச்சி! பாராட்டுதல்! அவர் ஏற்பினும், தள்ளிடினும்!!

பெரிய இடத்தில்!

கெய்ரோ மாநாடு முடிவடைந்து லால்பகதூர் கிளம்பியபோது, எகிப்து குடிஅரசுத் தலைவர் நாசர் சிறப்பான மரியாதை செய்து,

நாம் சகோதரர்கள்! என்று செப்பினாராம்.

வழக்கமாக இரவு ஒன்பது மணிக்குமேல் வெளியே புறப்படுவதில்லையாம் நாசர்; ஆனால் லால்பகதூரை வழி அனுப்பிவைக்க. இரவு விமானக்கூடம் சென்றாராம்.

இந்தச் செய்திகள் சுவைதருவன; லால்பகதூர் மீது புகழொளி விழுகிறது என்பதை எடுத்துக் காட்டுவன.

வண்ணம் கண்ணைக் கவருகிறது, மணம் மட்டும் இல்லை என்றால், காகிதப் பூக்கொத்து அது என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

பாசமும் நேசமும் காட்டினார் நாசர் — ஆனால் முக்கியமான பிரச்சினைகளிலே நமக்காக ஆதரவு தெரிவித்தாரா, திட்டவட்டமாக, தெளிவாக என்று பார்க்கும் போது, மகிழ்ச்சி பிறந்திடவில்லை.

எகிப்துக்கும் இஸ்ரேல் நாட்டுக்கும் தீராப்பகை.

இஸ்ரேல் அமைக்கப்பட்டதே ஒரு சர்வதேசச் சதி—வல்லரசுகள் அமைத்த சூதுக்கோட்டை இஸ்ரேல்—என்பது நாசரின் மாற்ற முடியாத கோட்பாடு.

எப்போதும் தவழ்ந்திடும் புன்னகை மறைந்தே போய்விடும், இஸ்ரேல்பற்றி நாசர் பேசும்போது.

இன்சொல் பயன்படுத்துவதிலே திறமை மிக்க நாசர், இஸ்ரேல்பற்றிப் பேசும்போது எரிச்சல் குண்டுகளை அள்ளி அள்ளி வீசுவார்.

ஜோர்டான் நதி குறித்த பிரச்சினையைக் கூறிடும் போது நாசர் கொதித்தெழுகிறார்.

இந்தப் போக்குக்கு அவர் ஆதரவு திரட்டுகிறார்.

நாசர் இஸ்ரேல் விஷயமாகக் கொண்டுள்ள போக்கை, இந்திய சர்க்கார் முழுக்க முழுக்க ஆதரிக்கிறது; எந்தவிதமான நிபந்தனையுமின்றி, எத்தகைய தயக்கமுமின்றி.

இப்போது கெய்ரோ சென்றிருந்த லால்பகதூர், பல்வேறு பிரச்சினைகள்பற்றி நாசருடன் கலந்து பேசினார்; பின்னர் இரு தலைவர்களும் கையொப்பமிட்டு ஓர் கூட்டறிக்கை வெளியிட்டனர்; அதிலே லால்பகதூர், நாசருக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்-இஸ்ரேல் பிரச்சினையில்.

அதுபோல, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் உள்ள காஷ்மீர் பிரச்சினைபற்றி, இந்தியாவுக்கு, நாசர் ஆதரவு தெரிவித்திருக்கிறாரா? என்றால், இல்லை! புத்திமதி கூறி இருக்கிறார்.

காஷ்மீர் பிரச்சினை எனும் சிக்கலை தீர்த்துக்கொள்ள, இந்தியாவும் பாகிஸ்தானமும் நேரடியாகக் கலந்து பேசவேண்டும்.

என்று அறிவுரை கூறியிருக்கிறார்.

இஸ்ரேல் விஷயமாக நாசர் கொண்டுள்ள போக்கு நியாயமானது, அதனை இந்தியா ஆதரிக்கிறது என்று லால்பகதூர் கூறியதுபோல, காஷ்மீர் விஷயமாக இந்தியா கொண்டுள்ள கருத்து நியாயமானது அதனை எகிப்து ஆதரிக்கிறது என்று நாசர் கூறவில்லை; கூற மறுக்கிறார்.

அதுபோலவே, சீனாவின் போக்கைக் கண்டிக்கவும் நாசர் முன்வரக் காணோம்.

கொழும்பு நாடுகளின் திட்டத்தின் அடிப்படையில் இந்தியாவும் சீனாவும் நேரிடையாகக் கலந்துபேச முடியாமலிருப்பது குறித்துத் தமது வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்—ஏன் கலந்துபேச முடியாதிருக்கிறது—யார்மீது தவறு–கொழும்பு திட்டத்தை ஏற்றுக்கொண்டு செயல்படாமல் கைப்பற்றியபகுதியை விழுங்கிவிட சீனா முனைந்து நிற்பது எப்படி நியாயமாகும்–என்பனபற்றி எல்லாம் ஒரு வார்த்தையும் பேச முன்வந்தாரில்லை நாசர்.

கலந்து பேசாதது குறித்து இருநாடுகளையும் ஒரு சேரக் கண்டிப்பதுபோல அமைந்திருக்கிறது நாசரின் பேச்சு.

கலந்து பேசுவதற்கான சூழ்நிலையை அமைக்க, கொழும்பு திட்டத்தைத் தீட்டிய நாடுகள், தாமாக, மறுபடியும் ஓர் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தார்; ஆனால் அப்படி ஒரு மாநாடு கூட்டிடவும் இயலவில்லை; கொழும்பு திட்டத்தில் தமது பெயரை இணைத்துக்கொண்ட நாட்டு அதிபர்கள், கெய்ரோவை விட்டுக் கிளம்பிவிட்டனர்.

தமது ஆதரவைத் திட்டவட்டமாக அளித்திடவில்லை நாசர்–ஆனால் அன்பு காட்டி இருக்கிறார்—மரியாதை காட்டி இருக்கிறார்! உடன்பிறந்தோர் நாம் என்று உபசாரம் பேசி இருக்கிறார்.

கொட்டைப் பாக்கு கொடுக்காத சிற்றப்பன், கடைத்தெரு வரையில் வந்து வழி அனுப்பிவைத்தானாம் என்று கொச்சை மொழியொன்று உண்டு.

அது சாதாரண குடும்பத்தில் நடப்பது.

இது பெரிய இடத்து விவகாரம்! அவ்வளவுதான், இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்று கூறத் தோன்றுகிறது!!

கைதி எண் 6342



தம்பி!

காது, மூக்கு, வாய், இந்தப் பகுதிகளிலே ஏற்படக் கூடிய வியாதிகளைத் தீர்த்துவைக்கும் நிபுணர் டாக்டர் சத்தியநாராயணா, மருத்துவருக்கு இருக்கவேண்டிய நல்லியல்புகள் பெற்றவர். முன்பு ஒருமுறை நண்பர் ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கு, குரலொலி கெட்டு விடத்தக்க நோய் ஏற்பட்டபோது, இதே டாக்டர் சத்திய நாராயணா அவர்கள்தான், தக்க அறுவை சிகிச்சை செய்து, குணப்படுத்தினார்கள். அப்போது அவர்கள் ஸ்டான்லி மருத்துவ மனையில் இருந்தார்கள். நான்கூட நண்பர் கோவிந்தசாமியைப் பார்க்க மருத்துவமனை சென்றிருந்தேன். இதனை நான் மறந்துவிட்டிருந்தேன் — டாக்டர் சத்தியநாராயணா நினைவுபடுத்தினார்கள். உயர்திரு. ஆச்சாரியார், அமெரிக்கா சென்றபோது உடன் சென்றிருந்தவர், டாக்டர் சத்தியநாராயணா. அவருடைய சீரிய மருத்துவ உதவிபெற்றுப் பெரும் பயன் அடைந்தேன்.

எனக்கு ஏற்பட்டுள்ள வலி போக்க, தனியாக எந்த மருந்தும் இல்லை என்பதால், இது மெள்ளமெள்ள தன்னாலேதான் போகவேண்டும், தேகப்பயிற்சி செய்வது ஒன்றுதான் இதற்குக் 'கைகண்ட மருந்து' வலி அதிகமாகும்போது ஒத்தடம் கொடுக்கலாம், வலியை மறந்திருக்க மாத்திரை உட்கொள்ளலாம், வேறு ஏதும் செய்வதற்கில்லை என்றுகூறி, மருத்துவ மனையிலிருந்து பிப்ரவரி 13-ம் நாள் என்னை மீண்டும்; சென்னை மத்திய சிறைக்கு அனுப்பிவைத்தார்கள். டாக்டர் சத்திய நாராயணா, 21-ந் தேதி வரவேண்டும், ஒரு ஊசி போடப் போகிறேன் என்று சொல்லி அனுப்பிவைத்தார்கள். டாக்டர் இரத்தினவேலு சுப்ரமணியம் அவர்கள் சில காலத்துக்கு, வாரம் ஒருமுறை மருத்துவமனை வந்து, பரிசோதித்துக்கொள்ள வேண்டும், அதுபற்றி நான் சர்க்காருக்கு எழுதி இருக்கிறேன் என்று கூறினார்கள். அவருடைய யோசனையை சர்க்கார் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. டாக்டர் சத்தியநாராயணா குறித்திருந்தபடி 21-ந் தேதி மருத்துவமனை சென்று அரை மணி நேரத்திற்கெல்லாம் திரும்பினேன் — மறுபடியும், மார்ச் 20-ம் நாள் வரச்சொல்லி இருக்கிறார். இப்போது கூட, வலி இருந்தபடி இருக்கிறது — இன்று பிற்பகல் கூட, வெந்நீர் ஒத்தடம் கொடுத்துக்கொண்டேன். வலி மறப்பதற்காக, ஒரு நாளைக்கு மூன்று வேளை நோவால்ஜின் மாத்திரைகள் உட்கொள்கிறேன். மருத்துவமனை சென்று திரும்பியதில் வலிபற்றி அச்சம் எழத்தக்க குழப்பம் நீங்கி, என்னோடு நீண்டநாள் இருக்கும் நினைப்புடன் இந்த வலி இருக்கிறது என்பது புரிந்துவிட்டது.

மருத்துவ மனையிலிருந்து சிறை செல்லும் ஏற்பாடு பற்றி, ராணி பரிமளம் ஆகியோருக்குத் தெரியாது— ஆகவே அவர்கள் வழக்கம்போல் அன்று மாலை வருவார்கள் — ஏமாற்றமடைவார்கள். இதைத் தவிர்க்க முடியுமா என்று எண்ணினேன்–மேலும் நான் படித்து முடித்துவிட்ட புத்தகங்களை வீட்டிற்குக் கொடுத்தனுப்ப வேண்டும், எப்படி? என்று எண்ணிக்கொண்டிருந்த நேரத்தில் தோழர் ஆசைத்தம்பி வந்தார் — அவரிடம் புத்தகக்கட்டைக் கொடுத்து வீட்டிலே சேர்த்துவிடும்படியும், நான் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டது பற்றிப் பரிமளத்திடம் கூறும்படியும் தெரிவித்தேன். ஆசைத்தம்பி, அதற்கு முன்பே இரண்டொருமுறை என்னைவந்து பார்த்தார்-மிகுந்த உற்சாகமாகத் தேர்தல் பணிகளைக் கவனித்துக்கொண்டு வருவதாகக் கூறினார். சென்னையில் வெற்றி நிச்சயம் என்று உறுதியாகக் கூறினார். நான் விடுதலை ஆகிறவரையில் வைத்திருக்கப் போவதாகக் கூறி, 'தாடி' வளர்த்துக்கொண்டிருந்தார்.

மருத்துவ மனையில் எனக்குத் துணையாக இருந்துவந்த டாக்டர் மோகன் எனும் இளைஞர், நான் சிறை செல்லக் கிளம்பும்போது, மெத்த வாட்டமடைந்தார். பல நாட்களாக, என்னுடன் பாசத்துடன் பழகிவந்த காரணத்தால், நான் மீண்டும் சிறை செல்வதறிந்து, ஒருவிதமான மனச்சங்கடம், அந்த இளைஞருக்கு. மருத்துவத்துறையில் ஈடுபட்டிருக்கும் இந்த இளைஞரின் தந்தை போலீஸ் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்றிருப்பவர், தாயார் கல்வித்துறையில் சீரிய பணியாற்றிக்கொண்டுவருபவர்.

மருத்துவ மனையில், எனக்குக் கிடைத்த முதல் நண்பர், டாக்டர் கிருஷ்ணன்—இவர் கோவை மாவட்டத்தவர்—என்னிடம் மிகுந்த பற்றுகொண்டு, எனக்குப் பெரும் துணையாக இருந்துவந்தார். டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம் அவர்களிடம், பயிற்சி பெற்றுக்

கொண்டிருந்தார்—ஆகவே அவர் என்னைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பிலும் இருந்தார். இனிய இயல்பு அன்பு ததும்பும் மனம். மருத்துவத் துறைக்கு ஏற்றவர். அவருடைய பயிற்சிக் காலம் முடிந்து அவர் வேறு இடத்தில் வேலை பெறச் செல்லவேண்டி ஏற்பட்டது. என்னை விட்டு விட்டுப் போக மனமின்றி, ஒரு வாரம், எனக்காகவே, மருத்துவ மனையில் தங்கி இருந்தார். நான் மீண்டும் சிறை செல்லும் வரையில், இருக்க எண்ணினர்—நான் வற்புறுத்தி அவரை அவருடைய கடமையை மேற்கொள்ளச் சொன்னேன். டாக்டர் கிருஷ்ணன், தான் போவதற்கு முன்பு, என்னைக் கவனித்துக் கொள்ளும்படி, டாக்டர் மோகனிடம் தான் சொல்லிவிட்டுச் சென்ருர்.

இந்த இரண்டு இளைஞர்களையும் நான் என்றென்றும் மறப்பதற்கில்லை.

என்னைக் கவனித்துக்கொண்ட டாக்டர்களில், சுந்தரகாந்தி என்பவரும், சங்கர் என்பவரும், குறிப்பிடத்தக்கவர்கள். டாக்டர் சொக்கலிங்கம் எனும் என் நண்பரும் எனக்குத் துணை புரிந்தார்.

மருத்துவ மகளிர் பலர்–உடன்பிறப்புகள் போன்ற அன்புடன் பணியாற்றி வந்தனர்.

நாவலரும், நடராசனும், கருணாநிதியும், வழக்கறிஞர் நாராயணசாமியும் அடிக்கடி வந்து, என் உடல் நலம் குறித்து விசாரித்தவண்ணம் இருந்தனர். பாராளுமன்ற உறுப்பினர்கள் மனோகரன், ராஜாராம், முத்து ஆகியோரும், அரங்கண்ணல், சி. வி. ராசகோபால், கிட்டு, மற்றும் பலரும் பலமுறை வந்து அளவளாவினர்.

நகராட்சி மன்றத் தேர்தல்கள் நான் மருத்துவ மனையில் இருந்தபோதே துவங்கிவிட்டன. பம்பரம் போலச் சுழன்று அதிலே பணியாற்றும் என் தம்பிகளுடன் இருந்து, பொறுப்பை ஏற்கும் வாய்ப்பை இழந்து, மொத்தச் சுமையையும் அவர்கள் தாங்கித் தத்தளிக்கும் நிலையை ஏற்படுத்திவிட்டு, நான் மருத்துவ மனையில் படுத்துக்கொண்டேன். தேர்தல் நிலைமைகளைப் பற்றி, களைத்துப்போய் இளைத்துப்போய், கருணாநிதியும் நடராசனும், நாவலரும் மற்றவர்களும் என்னிடம் வந்து சொல்லும்போதெல்லாம், அவர்களை இவ்வளவு தவிக்கச் செய்கிறேனே என்று என்னை நானே நொந்துகொண்டேன். எத்தனை விதமான இன்னல்கள் —எத்தனை எத்தனை எரிச்சலூட்டும் நிலைமைகள்— எத்தகைய கொடிய, இழிதன்மை மிகுந்த எதிர்ப்புகள், என்னென்ன சிக்கல்கள், பிரச்சினைகள், புகைச்சல்கள் —இவ்வளவுக்கும் இடையிலே அவர்கள் உழன்று கொண்டிருக்க, நான், மருத்துவ மனையில்! எனக்கு அதனை எண்ணும்போது மிகுந்த வேதனையாகக்கூட இருந்தது. ஆனல் அந்த வேதனைக் கிடையிலேயே ஒரு பெருமித உணர்ச்சியும் எழுந்தது—மறைப்பதற்கில்லை, திராவிட முன்னேற்றக் கழகப் பணிகளைச் செம்மையாகச் செய்திடும் ஆற்றல் மிக்கதோர் அணி அமைந்துவிட்டிருக்கிறது–நாமே முன்னின்று செயல்படவேண்டும் என்ற நிலை எனக்கு இல்லை—என்னை மகிழ்விக்க வேண்டும் என்பதைத் தமது கடமையாக்கிக்கொண்டு பணியாற்றும் பண்பினர் கொண்ட பாசறையாகிவிட்டது, தி. மு. க. என்று எண்ணி, மன மகிழ்ச்சி பெற்றேன். முதல் கட்ட தேர்தல் முடிவுகள். மருத்துவ மனையிலிருக்கும்போதே கிடைத்தன–நான் அகமகிழ்ந்தேன். இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெறும்போது, நான் சிறைவந்துவிட்டேன். சிறையில், இரண்டாம் கட்ட, முடிவுகளைக் கண்டேன்—களிப்புற்றேன். இறுதியாக, சென்னை மாநகராட்சித் தேர்தலில், கழகம் பெற்ற போற்றத்தக்க வெற்றி பற்றிய முழு விவரத்தைப் படித்துவிட்ட பிறகுதான், விட்ட இடத்திலிருந்து, இந்தக் குறிப்பினை எழுதத் தொடங்கினேன்.

நகராட்சி மன்றத் தேர்தல், மாநகராட்சி மன்றத் தேர்தல், இதிலே நமது கழகம் பெற்ற வெற்றிகள், அதனுல் பெறப்படும் அரசியல் பாடம், இவை, தனியாகவே விளக்கப்பட வேண்டிய, பிரச்சினை. இந்தக் குறிப்பில் நான் பெற்ற மகிழ்ச்சியை மட்டுமே எடுத்துக்காட்டினேன். இந்த வெற்றிச் செய்தியைப் படித்துவிட்டு; சாப்பிட உட்கார்ந்தபோது, இது சிறையாக அல்ல, சிங்கார மாளிகையாக மாறிவிட்டது! சிறை உணவு, தனிச்சுவை பெற்றுவிட்டது! நீ சிறையில் இருக்கும்போதெல்லாம், இத்தகைய சிறப்பான வெற்றிகளை ஈட்டித் தருவோம் என்று கழகத் தோழர்கள் கூறுவதுபோலிருக்கிறது! வார்டர்களின் பார்வையிலே ஒரு பாசம், திடீரென்று மலருகிறது. அதிகாரிகளின் பேச்சிலே புதுமணம் வீசுகிறது. பூங்காற்று மிகுந்து இருக்கிறது! புள்ளினம் இசை பாடுகிறது! அந்த இன்ப உணர்ச்சியுடன், இன்றிரவு துயில் கொள்ளச் செல்கிறேன்.

25—2—64

பல நாட்கள் எழுதாதிருந்ததால், மொத்த நிகழ்ச்சிகளைத் தொகுத்து, அளவைக் குறைத்து எழுதினேன். என் உடல்நிலை குறித்தும், தேர்தல்களைப்பற்றியும் எழுதியபோது, சிறையிலேயே ஏற்பட்டிருக்கிற மகிழ்ச்சி தரும் மாறுதலைக் குறிப்பிட மறந்துவிட்டேன், இப்போது நான் சிறை வந்த அன்று எந்தப் பகுதியில் நுழைந்தேனே அதே இடத்தில்தான் இருக்கிறேன்—ஆனல் ஆறும் எண் அறைக்கு வந்துவிட்டேன். நான் முன்பு இருந்த ஐந்தாவது எண் அறையில், அன்பழகன் இருக்கிருர்; ஏழாவது அறையில் தையற்கலை ஆசிரியர் சுந்தரம், எட்டாவது எண் அறையில் மதியழகன், கீழ் தளத்தில், தோழர்கள் பொன்னுவேல், வெங்கா, டி. எம். பார்த்தசாரதி. என் 'தனிமை' ஒழிந்தது, இனிமை மலர்ந்தது! தானுக அல்ல—மெத்தக்கஷ்டப்பட்டு.

மருத்துவமனையிலிருந்து திரும்பியதும், பழைய இடத்துக்கே என்னை, சிறை அதிகாரி அழைத்துச்சென்ருர்,

கவலை. கலக்கம். அவர்களெல்லாம் இருக்கும் இடத்துக்கே அழைத்துக்கொண்டு போகக்கூடாதா என்று கேட்டேன். இல்லை! அவர்களில் சிலர் இங்கு வருகிறார்கள்! என்று அதிகாரி கூறினார். அன்பழகன், மதியழகன், சுந்தரம் ஆகிய மூவரும் வந்தனர். தோளில் ஏற்பட்ட வலி, இருதய சம்பந்தமானது அல்ல என்று மருத்துவர் கூறியபோது ஏற்பட்ட, மன நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது, மூன்று நண்பர்களும் என்னுடன் இருந்திட வந்தபோது பிரிந்திருந்த நாட்களிலே, ஏற்பட்ட நிகழ்ச்சிகள்பற்றிப் பேசி மகிழ்ந்தோம். விளையாட்டுச் சாமான்கள் கிடைத்ததும் குழந்தைகள் குதூகலமடைவதுபோல, ஏதோ ஓர்வித மகிழ்ச்சி, சிரிப்பு, பேச்சு!

அன்பழகனைச் சுற்றி, ஒரே வள்ளுவர் மயம்! ஆமாம்! பரிமேலழகரின் வள்ளுவர், பரிதியாரின் வள்ளுவர், வரதராசனாரின் வள்ளுவர் இலக்குவனாரின் வள்ளுவர், குழந்தையின் வள்ளுவர் நாமக்கல்லார் வள்ளுவர், கி. வா. ஜெகனாதன் வள்ளுவர், மணக்குடவர் வள்ளுவர் இப்படிப் பலப்பல. திருக்குறள் ஆராய்ச்சி நூலொன்று திறம்பட ஆக்கிக்கொண்டிருக்கிறார் அன்பழகன். குறளாராய்ச்சி குறித்து உரையாடும் சுவைமிகு வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

மதியழகன், சான்றுவிளக்க நூலும், அதுபோன்ற வேறு சட்ட நுணுக்க ஏடுகளையும் படிப்பதும், சட்டசபைத்துறைக்கு இங்கிருந்தபடியே, பல்வேறு பிரச்சினைகள்பற்றிக் கேள்விகள் தயாரித்து அனுப்புவதும், இடையிடையே, பல முன்னாள்—இந்நாள் பிரச்சினைகள்பற்றி உரையாடுவதுமாக இருக்கிறார்.

சென்னை மாநகராட்சித் தேர்தல்முடிவு எப்படி இருக்குமோ என்று நான் குழம்பிக்கிடந்தபோது, வெற்றி நமக்குத்தான் என்பதை, புள்ளிபோட்டே காட்டிவிட்டார். பெரும்பாலும், அவர் போட்டுக் காட்டிய 'புள்ளி' மெய்யாகிவிட்டிருக்கிறது.

சிறுவர்களுக்கான உடைபற்றிய நூலொன்று தயாரித்துக்கொண்டிருக்கிறார், தோழர் சுந்தரம்.

நான் எழுதவேண்டும் என்று எண்ணிக்கொண்டுள்ள பிரச்சினைக்குத் தேவைப்படும் ஏடுகள் பெற முடியாமல், திகைத்துக்கிடக்கிறேன்; கிடைக்கும் ஏடுகளைப் படித்துக்கொண்டிருக்கிறேன்.

அறப்போரில் ஈடுபடுவதற்காக நான் சென்னை புறப்படுவதற்கு முன் இரவு, திருவத்திபுரத்தில் பேசினேன்—புலவர் கோவிந்தன் ஒரு காகிதக்கட்டு, மைக்கூடு, எழுதுகோல், 'இவைகளைக்கொடுத்து, தக்கதோர் நூல் எழுதவேண்டும், சிறையில் என்றார்.

சிறையில் உள்ள இடர்ப்பாடுகளை அவர் உணரவில்லை. அதிலும் இம்முறை, சிறையில் மிகுந்த கண்டிப்பு, கெடுபிடி!!

ஆறு புத்தகங்களுக்குமேல் அனுமதிக்க முடியாது—இப்படி ஒரு கண்டிப்பு.

அந்தப் புத்தகங்கள் அரசியல் சம்பந்தப்பட்டவைகளாக இருந்தால், அனுமதி மிகக் கடினம்.

புத்தகங்கள், இந்தச் சிறைக்குள்ளே நுழைந்ததும் நேரே எம்மிடம் வந்து சேரமுடியாது. ஒருவாரமோ, பத்து நாட்களோ, அவைகளுக்குக் கடுங்காவல்—அதிகாரிகளின் மேஜைக்குள்.

ஒரு வாரமாகிறது, 'அடக்குமுறைக்கொடுமை'பற்றிய ஒரு ஆங்கில ஏடு, இங்கே தரப்பட்டு, மிகுந்த ஆவலுடன், அந்தப் புத்தகத்தைக் கொண்டுவரச்சொல்லி இருந்தேன் — புதிய வெளியீடு — 19-ந்தேதி, பரிமளம் அந்தப் புத்தகத்தை என் எதிரில்தான் சிறை அதிகாரி ஒருவரிடம் கொடுத்தான்—அவர் மேலதிகாரியிடம் காட்டி, ஒப்புதல் பெற்றபிறகு தருவதாகச் சொன்னார்—இன்றுவரை, புத்தகம் தரப்படவில்லை. தரப்படாதது மட்டுமல்ல, எங்கே இருக்கிறது என்றே தெரியவில்லை என்றும் சொல்லுகிறார்கள்.

'அடக்குமுறை' பற்றிய புத்தகம் என்ற உடனே, இந்த நாட்டு நிலைமை-இந்தச் சர்க்கார் செய்திடும் கொடுமை பற்றிய புத்தகமோ என்று எண்ணிக் கொள்ளாதீர்கள் ஐயா! இது அடக்குமுறை எனும் பிரச்சினை பற்றி, மேனாட்டார் ஒருவர் வெளியிட்டுள்ள புதிய புத்தகம் என்றுகூட மேலதிகாரியிடம் விளக்கம் சொன்னேன். அதையும் கேட்டுக்கொண்டார், அதுதான் அவர் எனக்காகச் செய்தது. புத்தகம் என் கைக்கு வரவில்லை. சட்டமும் சமுதாயமும் என்பது பற்றி ஒரு நூலெழுத விரும்புகிறேன். அதற்காகப் பல ஏடுகள் தேவை—எங்கே கிடைக்கப் போகின்றன!

சிறையில் இம்முறை இத்தனை கண்டிப்பு இருப்பதற்குக் காரணம், புதிய சிறை அமைச்சருடைய 'பெருந்தன்மை'தான் என்று தெரிகிறது. தெரிந்து?

வாரத்துக்கு ஒரு முறை, கைதிகளை, நண்பர்கள் உறவினர்கள் வந்து பார்க்கலாம் என்பது சிறைக்கான விதிகளில் ஒன்று.

உறவினர்கள் மட்டுந்தான் பார்க்கலாம், நண்பர்கள் கூடாது என்று இம்முறை ஆக்கிவிட்டிருக்கிறார்கள். சுயராஜ்யம் மலரமலர அத்துணை மணம் வீசுகிறது. நண்பர்களும் வந்து பார்க்கலாம் என்றிருக்கும் விதியைக் காட்டி, முதலமைச்சரிடம் பேசிப்பாருங்கள் என்று நாவலரிடம், மருத்துவமனையில் இருக்கும்போது சொல்லிவிட்டு வந்தேன். முயற்சிசெய்து பார்க்கிறேன் என்றார்.

26—2—64

இன்று, நாவலரும், கருணாநிதியும், எம். ஜி. ராமச்சந்திரனும், கே. ஆர். ராமசாமியும், என்னைக் காண

வந்திருந்தனர். முதலமைச்சரிடம் நாவலர் பேசியதன் விளைவு. எல்லோரும் களைத்துப்போயிருந்தனர்-தேர்தல் அலுப்பு! எல்லோருடைய கண்களும் கீதம்பாடின — தேர்தல் வெற்றியின் விளைவு.

நாங்கள் பேச உட்கார்ந்த இடத்தில் — பக்கத்தில் —சிறையின் மேலதிகாரிகள் இருவர் உட்கார்ந்து கொண்டனர்-என்ன பேசிவிடுகிறோமோ, என்ற கவலை யுடன். அவ்வளவு கண்காணிப்பு. ஒருவருக்கொருவர் நலம் விசாரித்துக்கொண்டோம் — மாநகராட்சித் தேர்தலில், சில இடங்களில் ஏற்பட்ட தோல்விகள் பற்றிக் காரணம் கேட்டறிய விரும்பினேன். எப்படிக் கேட்பது! அரசியல் பேசக்கூடாதே! ஆகவே மதுரை வழக்கு எப்போது, சட்டசபை எப்போது கூடுகிறது, மோடாரில்தானே வந்தீர்கள், என்ற இவை பற்றித் தான் பேசினோம், பல நாட்களுக்குப் பிறகு சந்திக் கிறோம்—பேச முடிந்ததோ, இவ்வளவுதான். இதற் குள்ளாகவே ஒரு அதிகாரி தமது கைகடிகாரத் தைப் பார்த்துக்கொண்டார். இந்தச் சூழ்நிலையின் சங்கடம் எனக்கு மிகவும் வெறுப்பாக இருந்தது. விரை விலே பேசி முடித்து, அவர்களை அனுப்பிவிடுவதே நல்லது என்று தோன்றிவிட்டது.

ஒரு அதிகாரி சொன்னார் "பத்திரிகைகளில் எதை யாவது போட்டுவிடுகிறார்கள்—இன்னின்னார் வந்தார் கள், அண்ணாதுரையிடம் யோசனை கேட்டார்கள் என்றெல்லாம். அது, பல கேள்விகளை எழுப்பிவிடு கிறது. எங்களுக்குச் சங்கடமாக இருக்கிறது" என்று.

சிறையில் இம்முறை உள்ள நிலைமைக்குக் காரணம் ஏதேனும் கூறவேண்டும்போல, அதிகாரி களுக்கே தோன்றுகிறதுபோலும்.

நான் சொன்னேன், "பத்திரிகைகளில் வருவது பற்றி, கவலைப்படுவதானால், இங்கு எங்களைக் காண வருகிறவர்கள் மணிக்கணக்கில் காத்துக்கிடக்கும் கொடுமை, எங்களுக்கு எந்தவிதமான பொருளும் தருவித்துக்கொள்வதிலே இருக்கும் தடை இவைபற்றி எங்கள் பத்திரிகைகளில் வெளியிட முடியுமே — அது விரும்பத்தக்கதா?" என்றுகேட்டேன். அதிகாரி அதற்கு ஏதும் பதில் சொல்லவில்லை—"நாங்கள் சர்க்காருடைய உத்திரவின்படி நடந்துகொள்ள வேண்டியவர்கள்" என்றார். நான், "நீங்கள் எவ்வளவு உண்மையாக நடந்துகொண்டாலும், எங்களிடம் எவ்வளவு கண்டிப் பாக நடந்துகொண்டாலும், அதனாலேயே உங்களுக்கு நல்ல பெயர் வந்துவிடும், சர்க்கார் அதற்காகவே உங் களைப் பாராட்டிவிடும் என்றும் நம்பிவிடாதீர்கள்" என்று சொன்னேன். பொதுவாகப் பார்க்க வருபவர் கள் மனம் சங்கடம் அடையும்படியான சூழ்நிலை இங்கு ஏற்படுத்தப்படுகிறது. நண்பர்கள், நிலையை அறிந்து கொண்டு, விடைபெற்றுக்கொண்டு சென்றனர். அதி காரிகள் முகம் மலர்ந்தது. நண்பர்கள் பார்த்தசாரதி வெங்கா, பொன்னுவேல் ஆகியோரையும், நான் தங்கி இருக்கும் பகுதிக்கே அனுப்பிவிடலாமே என்றேன்— சரி என்று அதிகாரி ஒப்புக்கொண்டு 'நீங்கள் காலையில் 7-30 லிருந்து மாலை 4 மணி வரையில், சிறை உடுப்பில் தான் இருக்கவேண்டும், என்றார். 'சரி' என்றேன். நான் சிறை உடுப்பில் இருப்பதை அவர் பார்க்கவில்லை போல் தெரிகிறது. நூல் நூற்க வேண்டும் என்றார். எனக்குக் கைவலி அடியோடு போகவில்லை, இந்த நிலையில் நூற்பது இயலாது என்றேன். அதிகாரிகளின் இதயம் எவ்வளவு இளகியது என்பதைக் காண ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. கைவலி காரணமாக நூற்க இயலாது என்று நான் சொன்னவுடன், அதிகாரிகளில் ஒருவர், "தேகப்பயிற்சி செய்யச்சொன்னாரே டாக்டர்" என்று கருணை பொழிந்தார். "ஐயா! டாக்டர் செய்யச் சொன்ன தேகப்பயிற்சி வேறு, நூல் நூற்பது வேறு" என்று நான் கூறிவிட்டு வந்தேன்.

27—2—64

பார்த்தசாரதி, வெங்கா, பொன்னுவேல், மூவரும், இங்கு வந்து குடியேறினார்கள்—ஐவர் அணி, மீண்டும் ஒன்று கூடிற்று என்று மகிழ்ச்சி அடைந்தார்கள். பொன்னேரியில்சுந்தரமும், காஞ்சிபுரத்தில்பார்த்தசாரதி யும் பூவிருந்தவல்லியில் பொன்னுவேலும், செங்கற் பட்டில் வெங்காவும், சிறை வைக்கப்பட்டிருந்த சம்பவம் முதற்கொண்டு, தொடர்ந்து நடைபெற்ற பல சம்பவங்களைச் சொல்லச் சொல்லிக் கேட்டுக்கொண் டிருந்தேன்.

இன்று மாலை, காஞ்சிபுரம் மறியலில் ஈடுபட்டு சிறைத் தண்டனை ஏற்றிருக்கும் கேசவன் குழுவினர், சிறை உடையில், உட்புறம் அழைத்துச் செல்லப் பட்டதைக் கண்டேன். அடையாளம் தெரியவில்லை. சிறை உடை அத்துணை அலங்கோலத்தைக்கொடுத்து விட்டது. நேற்று, சின்னசாமி குழுவினரும் பிறகு சட்டமன்ற உறுப்பினர் ராமசாமியும் சிறை கொண்டு வரப்பட்டனர். ராமசாமியை நான் பார்க்க முடிய வில்லை. அவர்கள் வேறு பகுதியில் வைக்கப்பட்டுள் ளனர். சிறை வார்டர்கள் மூலமாக அவர்களைப் பற்றிய செய்தி அறியலாமா என்றால், ஒருவரும் பேசுவதில்லை — அவ்வளவு அச்சம் ஊட்டப்பட்டிருக் கிறது, இன்று மாலை, எங்கள் பகுதியின் நுழைவு வாயலருகே, தரையில் பாய் போட்டு, உட்கார்ந்து கொண்டு, தேய்ந்துபோன நிலையில் உள்ள 'கைதி களை', வார்டர்கள் உட்புறம் அழைத்துக்கொண்டு போவதைப் பார்த்துக்கொண்டிருந்தேன். இவர்கள், பல்வேறு குற்றங்கள் செய்ததற்காக இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். இங்கு இவர்கள் இருக்கும் நிலையைப் பார்க்கும்போது, விடுதலை பெற்று வெளியே செல்லும்போது சமூகத்திலே இடம் பெற்று, செய்யும் தொழில் கிடைக்கப்பெற்று, புதுவாழ்வு பெறப் போகி

ருர்களா என்பதை எண்ணிக்கொண்டேன். வெளியில் இருந்தபோது, நாணயமான தொழில் நடத்தி பிழைக்க முடியாமல், குற்றம் இழைத்தார்கள்; உள்ளே வந்ததன் காரணமாக, எந்தத் தொழிலுக்குமே இலாயக்கற்ற 'உருவங்கள்' ஆகிவிடுகிருர்களே, இவர்கள் இனி வெளியே போய் என்ன பலன் காணப்போகிருர்கள் என்பதை எண்ணியபோது, மிகுந்த கவலையாகிவிட்டது. இந்தக் கவலையுடனேயே இன்றிரவு படுக்கச் செல்லவேண்டும் போலிருக்கிறது.

28—2—64

சிறை, எதனுலே கொடுமையானதாகிறது என்பது பற்றி யோசித்துப் பார்த்தேன்; அறையில் போட்டு அடைத்துப் பூட்டிவைக்கிருர்கள், என்பதால் மட்டும் அல்ல. அதிகாரிகளின் அக்கறை அற்ற போக்கு மன துக்குச் சங்கடம் தருகிறது என்பதால் மட்டுமல்ல, கொடுமைக்கு மிக முக்கியமான காரணம், ஒருநாள் போலவே மற்ற எல்லா நாட்களும் உள்ளன! ஒவ்வொரு நாளும், வேக வேகமான நினைப்புகளில் நடவடிக்கை களில், தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளவர்கள், எல்லா நாட்களும் ஒரே விதமாகவே தோற்றமளிக்கும் படியான நிலை, சிறையில் இருப்பதைத்தான், தாங்கிக் கொள்ள முடியாத கொடுமை என்று உணருவார்கள். ஒருநாள் நடவடிக்கையை, விவரித்தால், அது மற்ற எல்லா நாட்களும் பொருந்துவதாக அமைந்துவிடும். இன்று என்ன நிகழ்ச்சிகள் என்று கணக்கிட்டுக் காட்டுகிறேன்—காலையில் எழுந்து, காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, சிறை உடை அணிந்துகொண்டேன். மெத்த அன்புடன், முகமலர்ச்சியுடன் தோழர் பார்த்தசாரதி, 'தோசை' கொடுத்துச் சாப்பிடச் சொன்னுர்—அவருடைய முகம் எவ்வளவு மலர்ந்திருந்ததோ அந்த அளவுக்கு 'தோசை' என்ற பெயர் படைத்த அந்தப் பண்டம், கருத்து, வறண்டுபோய் இருந்தது. கோதுமை மாவினுலே செய்யப்பட்ட மெல்லிய அடை! பிறகு காபி; நிறத்தாலே அந்தப் பெயர் பெறுகிறது, மணத்தாலும் சுவையாலும் அல்ல. பிறகு நூற்பு வேலை—இழையின் நீளம் எவ்வளவு என்பதைவிட எத்தனை முறை அறுந்தது என்பதுதான் எனக்கு நினைவிற்கு வருகிறது. பிற்பகல் 1 மணிக்குச் சாப்பாடு. காலையில் ஒன்பது அல்லது பத்து மணிக்கெல்லாம் செய்யப்பட்டு நன்ருக சில்லிட்டுப் போன நிலையில், எங்களுக்காக உட்புறமிருந்து கொடுத்தனுப்பப்படும் சோறு. பருப்பு கலந்த குழம்பு—கலந்த என்று, உபசாரத்துக்காகச் சொல்கிறேன்—துறவிகள் உலகிலே வாழ்ந்தாலும் பற்றற்று இருப்பார்கள் என்கிருர்களே அதுபோல, பருப்பும் குழம்பும் ஒரே குவளையில் உள்ளன —ஒன்றுக்கொன்று பாசமற்று! எனவே சுவை இருப்பதில்லை. கருநிறமுள்ள, ரசம்! பிறகு, எங்களுக்கு அளிக்கப்படும் (காபிக்காக)பாலிலிருந்து நாங்களே தயாரித்துக்கொள்ளும் தயிர்! பொரியல் ஒன்று உண்டு—ஒவ்வொரு நாளும்—ஆனுல் அதனை நான் குறிப்பிடாததற்குக் காரணம், நான் அதனைப் பயன்படுத்தாதது தான். பயன்படுத்தியவர்கள், படும் கஷ்டத்தை மட்டும் பார்க்கிறேன். ஒரு விவாதமே நடத்துகிருர்கள், பொரியலில் போடப்பட்டிருப்பது என்ன பண்டம்—என்ன கறி—என்பது குறித்து.

சாப்பாட்டுச்குப் பிறகு ஒரு மணி நேரம் ஓய்வு.

பிறகு, மறுபடியும் நூற்பது—நூற்பு முயற்சி.

ஆறு மணிக்கு, அறையில் போட்டு அடைத்து விடுகிருர்கள்—தனித்தனி அறையில்.

இந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொரு நாளும்.

பொதுவாழ்க்கைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் ஒவ்வொரு நாளும் பல பிரச்சினைகளை, பல கோணங்களிலிருந்து, பல நண்பர்களுடன் பேசி, சுவையும் பயனும் பெறுபவர்கள். தோழமையினுல் பெறப்படும் இனிமையைப் பெரிதும் விரும்பி வரவேற்பவர்கள். கழக அமைப்புபற்றி, கழகத் தோழர்களின் எண்ணங்களைப் பற்றி அறிவதிலும், உரையாடி அகமகிழ்வதிலும், ஈடுபட்ட வண்ணம் இருக்கும் என்னையும் என்போன்ற மற்றவர்களையும், செயலற்றவர்களாக இருக்கும் நிலையை மேற்கொள்ள வைக்கிருர்களே சிறையில், இதனைவிடக் கொடுமை வேறு என்ன இருக்கமுடியும்? அதிலும் நகராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்ற பரபரப்பான சூழ்நிலை வெளியே இருந்தபோது, உள்ளே அடைபட்டுக்கிடந்தது, உள்ளபடி மெத்த வருத்தமாக இருந்தது. ஆனுல், குடும்பம், அதுதரும் குளிர்ச்சி; தோழமை, அதுதரும் இனிமை; தொண்டு, அது அளிக்

அண்ணுவின்
கருத்தோவியங்கள்

பாவையின் பயணம்	ரூ. 1-50
அரசாண்ட ஆண்டி	ரூ. 1-50
மதுரைக்கு டிக்கெட் இல்லை	ரூ. 2-00

கிடைக்குமிடம்:
பரிமளம் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்.

கும் பெருமித உணர்ச்சி இவைகளை இழந்து, சிறையில் கிடந்தபோதிலும், சிறைக் கதவுகளேயும் கோட்டை மதில்போன்ற சுவர்களையும் தாண்டிக்கொண்டு, எங்கள் எண்ணம், சிட்டுப்போலச் சிறகடித்துக்கொண்டு பறந்து, கழக நிகழ்ச்சிகள் நடைபெறும் இடமெங்கணும் வட்டமிட்டபடிதான் இருக்கிறது. கண்ணுக்குப் புலனுகாமல், இருக்கும்நிலை; கருத்துக்கு எல்லாம் தெளிவாகப் புலனுகிறது. தூயதோர் நோக்கத்துக்காக, இந்தக் கொடுமையை நாமே மனமுவந்து ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்ற எண்ணமும், நம்மிடம் பற்றும் பாசமும் கொண்ட இலட்சக்கணக்கானவர்கள் வெளியே நம்முடைய நோக்கத்துக்கு ஆதரவு அளித்து வருகிருர்கள் என்பதை உணருவதால் ஏற்படும் எக்களிப்பும், சிறைதரும் சங்கடமான சூழ்நிலையை மறந்திருக்கச் செய்துவிடுகிறது என்பதிலே ஐயமில்லை. எனக்கு உள்ளதுபோன்ற இதே உணர்ச்சிதான், இங்கு மரம் அறுக்கும் வேலையிலும், மாவு அரைக்கும் வேலையிலும், நூற்கும் வேலையிலும், ஈடுபட்டு உழலும், நமது கழகத் தோழர்கள் அனைவருக்கும் இருக்கிறது. அவர்களைப்பார்க்க, பேச, எனக்கு வாய்ப்பு இல்லை. அவர்கள், நண்பர்களையோ, உறவினர்களையோ காண்பதற்காக அழைத்து வரப்படுகிறபோது, நான் இருக்கும் பக்கமாகத்தான் செல்லவேண்டும்—அந்த நேரத்தில் பார்க்க, புன்னகை காட்ட, வணக்கம் கூறிக்கொள்ள முடிகிறது; அருகில் வர, சிறைக்காவலர்கள் அனுமதிப்பதில்லை.

சிறையில்உள்ள தோழர்களில், இருவர் மோகனசுந்தரம், லோகநாதன், மாநகராட்சி மன்றத்தேர்தலில் ஈடுபட்டார்கள்—இதிலே லோகநாதன் வெற்றிபெற்றுர்—மற்றவர், நாவலர் நடையிலே சொல்லுவதானுல், வெற்றிக்கான வாய்ப்பை இழந்துவிட்டார்.

பொதுவாக, மாநகராட்சி மன்றத் தேர்தலில், நமது கழகம் பெற்ற வெற்றி, சிறையில்உள்ள நமது கழகத் தோழர்களுக்கு அளவிட முடியாத மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

மோகனசுந்தரம் வெற்றிபெற முடியாமற்போய் விட்டதற்கான காரணம்பற்றி, இன்று மதியழகன் விவரமாகச் சொன்னுர் — அந்த வட்டத்தின் அமைப்பு — வாக்காளர்களின் வகை — இவைபற்றி, நல்ல தெளிவான மதிப்பீடு போட முடிந்திருக்கிறது மதியழகனுல். தேர்தல் களத்திற்குத் தேவையான, முறைகளையும், தகவல்களையும், நமது கழகத் தோழர்கள், கூடுமான வரையில், பாராட்டத்தக்க அளவு பெற்றுவருகின்றனர்—தேர்தல் வெற்றிக்கு அது மிகமுக்கியமான காரணம். தேர்தலில் கிடைத்த வாக்குகளை பலமுறை, ஆராய்ந்து பார்த்திட்டதில், பல இடங்களில், நாம், பெறவேண்டிய வெற்றி, நமது கரத்திலிருந்து நழுவிவிட்டிருப்பது தெரிகிறது. கழகம் அடியோடுதோற்றுவிடும் என்று எழுதிய இதழ்கள், கழக வெற்றிக்குப் பிறகு, என்ன எழுதியுள்ளன என்பதனைப் படித்து, அதுபற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். பல இதழ்கள், காங்கிரஸ் ஆட்சியில்உள்ள கேடுபாடுகளைக் கண்டிக்கின்றன என்ருலும் கழகத்தை வெளிப்படையாக ஆதரித்து, காங்கிரசின் கோபத்துக்கு ஆளாகிவிடக்கூடாது என்று அச்சம் கொண்ட நிலையில் உள்ளதுபற்றி நண்பர்கள் எடுத்துக் கூறினுர்கள், இது இயல்புதான்; ஏனெனில், நமது கழகம் 'பிரமுகர்கள்' கொண்டது அல்ல, ஆகவே இந்தக் கழக வளர்ச்சி, இதழ்களுக்குக்கூட எரிச்சலை மூட்டுகிறது; ஆனுல் ஒன்று, மக்கள், இதழ்களின் இருட்டிப்பு, இட்டுக்கட்டும் முறை இவைகளை இப்போது பொருட்படுத்துவதில்லை, எழுதப்பட்டுள்வைகளை அப்படியே ஏற்றுக்கொள்வதில்லை. எடைபோட்டுப் பார்க்கிருர்கள், என்பதுபற்றி நான் விளக்கிக்காட்டினேன். பாராளுமன்றத்துறையில் படிப்படியாக முன்னேறிக்கொண்டுவரும் இந்தக் கட்டத்தில், ஒரு ஆங்கில இதழ், குறைந்த அளவு வார இதழாவது, கழகத்துக்கு அவசரமாகத் தேவை என்பதுபற்றி, மதியழகன் வலியுறுத்திச் சொன்னுர். நான் நடத்திக்கொண்டு வந்த ஆங்கில வார இதழ் நிறுத்தப்படவேண்டி ஏற்பட்ட நிலைமைகளை எடுத்துக் கூறினேன். எத்தனை சங்கடம் இருந்தாலும், வெளியே வந்ததும், மறுபடியும் ஆங்கில வாரப் பத்திரிகையைத் தொடங்கியாகவேண்டும் என்ற உறுதி ஏற்பட்டிருக்கிறது. இந்த இன்ப நினைப்பை அணைத்தபடி இன்று துயிலச் செல்கிறேன்.

29—2—64

"எவனெருவன் இந்திரியங்கள் எனும் துட்டக் குதிரைகளுக்கு அறிவெனும் கடிவாளமிட்டு அடக்கி, நன்னெறி எனும் பாதையிலே செலுத்துகிருனே, அவனே அரனடி எனும் திருத்தலத்தை அடைவான். இடையே இச்சை எனும் நச்சுக்கொடி கிடக்கும், பச்சென்று இருக்கிறதே என்று பார்த்தாலோ சிக்கினேரைச் சீரழிக்கும். அதற்கு நிராசை எனும் சாட்டை கொண்டு குதிரையைத் தட்டவேண்டும்."

மட அதிபரின் பேச்சல்லவா? இதை ஏன், சிறையில் உள்ள நான் எடுத்துக் கூறுகிறேன் என்று எண்ணுகிறீர்கள்.

நான் அல்ல, நண்பர் மதியழகன் இன்று, மடாதிபதிபோலவே, எங்கள் அறையில் உள்ள 'சிமெண்ட்' திண்ணையில் உட்கார்ந்துகொண்டு, இதுபோலப் பேசினுர். பேச்சு அல்ல இது பாடம். 'சந்திரோதயம்' என்ற நாடகத்தில் அவர் அழகூர் மடாதிபதியாக வேடம் தாங்கிப் பேசுவது. அதனை இன்று நினைவு படுத்திக்கொண்டார். ஏன் என்கிறீர்களா? நமது கழகப் பிரசாரத்துக்காக, முன்பு நாடகங்கள் நடத்துவோமே, அது நின்றுபோய்விட்டது நல்லதல்ல மறுபடியும் நாடகங்கள் போடவேண்டும் என்ற யோசனை பற்றிய பேச்சு எழவே மதி, இந்த மடாதிபதி உரையை

எடுத்துக்கூறி, சட்டசபையில் மடாலயங்கள் பற்றிய விவாதத்தின்போது, இந்த வாசகங்களை, தான் கூறியதாகச் சொன்னார். அமைச்சர்கள்கூட மகிழ்ச்சி அடைந்தார்களாம். நாடகங்கள் நடத்துவதுபற்றிய பேச்சு வளர்ந்து, பொதுவாக, கழகப் பிரசார முறைகள், அளவு. இவைபற்றிய விவாதமாக மலர்ந்தது. இம்முறை, மாநகராட்சிமன்றத் தேர்தலில், நமது கழக ஆதரவுக்காக மறைந்த நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணனின் மகன் கோலப்பா வில்லுப்பாட்டும், சேதுராசன் பலகுரல் நிகழ்ச்சியும், நல்ல முறையில் நடத்தி இருக்கிறார்கள் என்பதை இதழ்களில் கண்டோம். அதுபற்றி நான் மகிழ்ச்சியுடன் பாராட்டினேன். நாடகங்கள் தேவைதான்—ஆனால் நான் இனி நடிப்பது இயலாது — நீங்களெல்லாம் நடிக்கலாமே என்று அன்பழகன் ஆகியோரிடம் கூறினேன். அவர்களுக்கு விருப்பம் எழுந்ததை உணர்ந்து மகிழ்ந்தேன். நாடகம் எழுதிக்கொடுங்கள் என்று கேட்டார்கள். "ஆகட்டும், பார்க்கலாம்" என்று காமராஜர்போலச்சொன்னேன்.

இன்று, தோழர்கள் மதியழகன், அன்பழகன்; சுந்தரம், ஆகியோரைக் காண, அவர்கள் வீட்டிலிருந்து வந்திருந்தார்கள். பரிமளம், வரக்கூடும் என்று சிறை மேலதிகாரி கூறியதாகக் கேள்விப்பட்டேன். வரவில்லை. ஒரு சமயம், காஞ்சிபுரம் போயிருக்கக்கூடும் என்று எண்ணுகிறேன்.

1—3—64

மார்ச்சு மாதம் துவங்கிவிட்டது—துவக்க நாள் ஞாயிற்றுக்கிழமை—ஞாயிற்றுக்கிழமை, சிறையிலே சந்தடியற்ற நாள்.

பகலெல்லாம், நிரம்பப் பேசிக்கொண்டிருந்தோம்—கோவையாக ஒரே விஷயத்தை அல்ல, பல விஷயங்கள்பற்றி.

வெங்கா, திறமையாக நூற்பு வேலை செய்கிறார்; எனவே அவரிடம் பயிற்சி பெற முனைந்தேன்.

இன்று பிற்பகல், விலைவாசி குறைப்புப் போராட்டத்தின்போது வேலூர் சிறையில் இருந்தது பற்றிய விவரங்களை, நானும் பொன்னுவேலுவும், மற்றவர்களிடம் 'கதை கதை'யாகச் சொன்னோம். அவர்களிடம் அதுபற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போதே, இரவெல்லாம் பேசித் தொல்லை கொடுப்பதால் முகத்தைச் சுளித்துக்கொள்ளும் என் அருமை நண்பர் ராஜகோபால் என் மனக் கண்முன் வந்துநின்றார். தேர்தலில் தோற்றுவிட்டதால், மெத்தவும் திகைத்துப் போயிருப்பார்—என்னை வந்து பார்த்துவிட்டுச் சென்றிருந்தாலாவது சிறிது ஆறுதலாக இருந்திருக்கும்—வரக்காணோம். வேலூர் சிறை நிகழ்ச்சி பற்றிய பேச்சு நடைபெற்றதும், சாரதியின் உரத்த குரல், சண்முகத்தின் வெடிச் சிரிப்பு, வடிவேலுவின் உருக்கமான பாட்டு தருமலிங்கத்தின், பாகவதர் பாடல், எல்லாம் நினைவிற்கு வந்தன. அந்த நாட்களில், நமது கழகத் தோழர்கள் பல நூறு பேர், ஒரே பகுதியில், காவலில் வைக்கப்பட்டிருந்ததால், ஒருவருடன் ஒருவர் பழக வாய்ப்பு இருந்தது.

தோழர் சுந்தரம் எனக்குப் பல ஆண்டுகளாக நண்பர்; அன்பழகனுக்கு நெருக்கமான நண்பர்; ஆனால் சிறைபுகக் கூடியவர் என்று நான் எண்ணினதில்லை. என்னிடம் அவர் அறப்போரில் ஈடுபடப் போவதாக, மற்றவர்கள் சொன்னபோது, நான் முதலில் நம்பவில்லை; பிறகு, தடுத்தும் பார்த்தேன். இன்று, அவரிடம், சிறை செல்லும் துணிவும் விருப்பமும் எப்படிப் பெற முடிந்தது என்பதுபற்றிக் கேட்டேன். என் பங்கை நான் செலுத்த வேண்டும் என்ற உணர்வு கொண்டுதான் நான் ஈடுபட்டேன், என்று அவர் கூறினார். சிறையில், சங்கடமும், சலிப்பும், பயமும் ஏற்படவில்லையா என்று கேட்டேன். முதலில், என்னைத் தனியாக, பொன்னேரியில் கொண்டுபோய் அடைத்தார்களே அப்போது சங்கடமாகவும்; பயமாகவும் இருந்தது. நல்ல மழை. நான் இருந்த அறையிலே விளக்கும் இல்லை. பாம்பே கூட நுழைந்துவிட்டது; அப்போதுதான் பயப்பட்டேன்; இங்குவந்த பிறகு, சங்கடமாகத் தோன்றவில்லை என்று கூறினார்.

இன்று மாலை, கடற்கரையில் பாராட்டுக் கூட்டம். அதிலே கூடிடும் பெருந்திரளைக்காண்கிறேன்! மகிழ்ச்சி ஒலி காதிலே விழுகிறது! புன்னகைதவழும் முகங்களைக் காண்கிறேன்! எல்லாம் இங்கு இருந்தபடி. என் வாழ்த்துக்களை வழங்கி மகிழ்கிறேன்.

நாளை இதழ்களில், செய்தி பார்த்து, மகிழ வேண்டும்.

இன்றிரவு, அந்தக் கூட்டத்திலே, 'அறிமுகம்' செய்யப்பட்டு பாராட்டுப் பெறும், மாநகராட்சி மன்ற உறுப்பினர்களை எண்ணி மகிழ்ந்தபடி, உறங்கச் செல்கிறேன்.

அண்ணன்,



விற்பனையாளர்களுக்கு

மணியார்டர், செக், டிராப்ட், கடிதங்கள் அனுப்பும்போது உரிமையாளர் "காஞ்சி" அலுவலகம் சின்ன காஞ்சிபுரம் என்று குறிப்பிட்டு எழுதவும்.

Proprietor:
"KANCHI"
L. Kanoheepuram.

அந்திக்கலம்பகம்

"பொன்னி! என்ன இது பத்திரிகையைப் பிரித்ததும், குலைநடுக்கம் எடுக்கும் செய்திகளே இருக்கின்றன; படித்து முடித்ததும் கவலையும் பயமும் வாட்டுகிறது."

"எதைச் சொல்லுகிறாய் ஏமு! ரயில் விபத்து, விமான விபத்து இதுபற்றிப் படித்தாயா..."

"விமான விபத்துகூட இங்கே நடந்திருக்கிறது; நல்ல வேளையாக ஒருவருக்கும் ஒருவிதமான ஆபத்தும் இல்லை பட்டு! நான் சொல்வது அதை அல்ல. சோற்றுக்காக மக்கள் படும் திண்டாட்டம் இருக்கிறதே சொல்லி முடியாது; அப்படி இருக்கிறதே. கலகம் கலவரம், பீதி பயங்கரம், தடியடி துப்பாக்கிப்பிரயோகம் இப்படி அல்லவா செய்திகள் வருகின்றன..."

"கொள்ளை அடிக்க வந்தால் சர்க்கார் சும்மா இருக்க முடியுமா ஏமு!..."

"இது எல்லோருக்கும் தெரிந்தது தான் பட்டு! நேற்று வரையிலே சாந்தமாக நடந்துகொண்ட மக்கள் ஏன் அமளியில் ஈடுபடுகிறார்கள். அவர்களுக்கென்ன இதுதான் பொழுதுபோக்கா, விளையாட்டா..."

"பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்பது பழமொழி பட்டு! தெரியுமல்லவா உனக்கது..."

"அதைத்தான் சொல்கிறேன் பொன்னி! மக்களுக்கு உணவு கொடுக்கக்கூட ஒரு சர்க்காருக்குத் திறமை இல்லை என்றால் அந்த சர்க்காரை வாழ்த்தவா முடியும்..."

"ஏன்! வாழ்த்துகிறார்களே சில பேர்..."

"அவர்கள் பொன்னி! புலி தின்று உமிழுவதைத் தின்று பிழைக்கும் நரிக் கூட்டம். வாழ்த்தினால் அது கிடைக்கும் இது கிடைக்கும் என்ற நப்பாசை வேறென்ன"

"உணவுப் பிரச்சினையை வேண்டுமென்றே பெரிதாக்கிக் கலகத்தை மூட்டுகிறார்கள் எதிர்க் கட்சிக்காரர்கள் என்று..."

"என்று, நம்மை எல்லாம் ஏமாளிகள் என்று எண்ணிக்கொண்டு காங்கிரசின் எடுபிடிகள் பேசுகின்றன; அதையும் படித்தேன். ஏதாவது துளி நியாய புத்தி இருக்கிறதா அந்தப் பேச்சில் உழைக்கிற மக்களுக்கு உண்ண உணவு கிடைக்காவிட்டால் என்ன செய்வார்கள். கேட்கமாட்டார்களா ஆளுகின்றவர்களை".



"பதில் சொல்லுகிருரே மந்திரி இந்தக் கேள்விக்கு..."

"என்னத்தைப் பதில் சொல்கிருர். கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். இன்னும் சில நாளிலே நிலைமை சரியாகிவிடும் என்கிருர். அரிசிக் கடை முன்னுலேயோ, வேத பாராயணக் கூட்டம் அளவு இருந்துவந்த தொகை இப்போது தேர் திருவிழா அளவுக்கு வளர்ந்து விட்டிருக்கிறது."

"ஆமாம்! அது காணக்கண்ணராவியாகத்தான் இருக்கிறது ஏமு! ஒரு குழந்தைகூட மிதிபட்டுச் செத்து விட்டதாமே..."

'இந்தப் படுபாதகத்துக்கு யார் பொறுப்பு..."

"அவசரப்பட்டு, நெருக்கிக் கொண்டு நிற்பதால் மிதிபட்டுச் செத்துப் போகிருர்கள்..."

"அது தெரிகிறது பட்டு! நன்ருக, ஆனல் ஏன் நெருக்கிக்கொண்டு நிற்கிருர்கள், எல்லோருக்கும் அரிசி கட்டாயம் கிடைக்கும் என்ற உத்திரவாதம் இல்லேயே, உறுதி இல்லேயே. அதனுல்தான் இடித்துக்கொண்டு போயாவது அரிசி வாங்க வேண்டுமென்று மக்கள் துடிக்கிருர்கள்.

"என்னதான் செய்யச் சொல்கிருய் சர்க்காரை..."

"மாடமாளிகைகூட கோபுரம் கட்டிக் கொடுக்கச் சொல்லிக் கேட்கவில்லேயே. வயிருரச் சோறு போடச் சொல்லித்தான் மக்கள் கேட்கிருர்கள். இதைக் கூடச் செய்யமுடியாதவர்களுக்கு ஆட்சி எதற்கு?"

"இதைக் கேட்டால் சர்க்கார் என்ன பதில்சொல்லும் தெரியுமா?"

"தெரிகிறதே! தடி பேசுகிறது! துப்பாக்கி பேசுகிறது! அர்ஜுனன் என்பவர்மீது சுட்டார்களாம், மார்பிலே நுழைந்து முதுகு பக்கம் வந்ததாமே குண்டு; சுருண்டு விழுந்து செத்துப் போனுராமே..."

ஆமாம் ஏமு! படிக்கும்போதே என் கண்களில் குபு குபுவென்று கண்ணீர் கொப்பளித்துக் கொண்டு வந்தது."

"ரொட்டி கேட்டால் கல்லேக் கொடுக்கிருர்கள் என்று வெள்ளேக் காரன் காலத்தில் காங்கிரஸ் தலேவர் கவிக்குயில் சரோஜினிதேவி பேசினுர்களாம்..."

"அப்படியா பொன்னி! இப்போது சோறு கேட்டால் சுட்டே தள்ளுகிருர்களே..."

"ஏமு! சுடுவது என்பது காங்கிரஸ் ஆட்சியிலே மட்டுந்தானு! வெள்ளேக்காரன் அரசாண்டபோது கூடத்தான் சுட்டுத் தள்ளினுர்கள் ......"

"பட்டு! உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே! வெள்ளேக்காரன்காலத்தில், கூட்டத்தைஅடக்கவோ கலேக்கவோ சுடுவது என்ருல், முதலில் ஆகாயத்தை நோக்கிச் சுடுவார்கள், அதிலே ஜனங்கள் கலேந்து போகாவிட்டால்தான் ஆளேப் பார்த்துச் சுடுவார்கள்; அதுவும் பயப் படுத்தி; விரட்ட; முழங்காலுக்குக் கீழே சுடுவார்கள். காங்கிரஸ் ஆட்சியிலே இந்த முறையே மாற்றப் பட்டுப் போய்விட்டது. இப்போது மிரட்டுவதற்காகச் சுடு! என்பதல்ல உத்திரவு. சாகடிக்கச் சுடு! அதாவது சுட்டுக் கொல்லு!! என்பது உத்திரவு..."

"இப்ப என்னடி சொல்றே பட்டு! இதுதான் ராம ராஜ்யமா, காந்தி ராஜ்யமா, தர்ம ராஜ்யமா..."

"ஏமு! இது நம்ம ராஜ்யம்! அதாவது நாமாகப் பார்த்துத் தேடிக் கொண்ட ராஜ்யம்! மண்ணுக்கு ஏற்ற பாண்டம்! நாலுக்கேற்ற சேலே! நாம் தேர்தலிலே காட்டுகிற புத்திசாலித்தனத்துக்கு ஏற்றஆட்சி — ராஜ்யம் அமைகிறது. பச்சை மிளகாயைக் கடித்துவிட்டு, நாக்கு எரிகிறதே என்று பின்னுலே துடித்து என்ன பலன்..."

"உண்மைதான் பொன்னி! நீ சொல்வது. ஆனல் ஓட்டு போட்டு விட்டதற்காக இவர்கள் இப்படியா வேட்டும் கையுமாகத் திரிவது."

"இப்போது கேட்டு என்னபயன் ஏமு! தேர்தல் வருகிறபோது கேட்க வேண்டும். பிரிட்டனேப்பார்! கன்சர்வேடிவ் கட்சி ஆட்சியை நீக்கிவிட்டார்களே! தொழிற்கட்சி ஆட்சி அமைக்கிறது. அந்த மக்கள் ஜனநாயக கடமையை அவ்வளவு செம்மையாகச் செய்கிருர்கள். இங்கு..."

"இங்கு...பணபலத்தைக் காட்டி, மறுபடியும் மறுபடியும் காங்கிரஸ் தேர்தலிலே ஜெயித்துவிடுகிறது"

"அந்தப் பணபலம் எங்கே இருந்து காங்கிரசுக்குக் கிடைக்கிறது?"

"பணக்காரர்கள் தேர்தல் நிதி கொட்டிக் கொடுக்கிருர்கள்."

"ஏன்? என்ன வந்தது அவர்களுக்கு? என்ன இலாபம் அவர்களுக்கு...?"

"என்ன இலாபமா! பைத்யமே! பைத்யமே! லேசென்சு, பெர்மிட்டு, கோட்டா, இதெல்லாம் கிடைக்கிறதே. அதை வைத்துக்கொண்டு, கொள்ளே அடித்துக் கோடீஸ்வரர் களாகிருர்கள் இந்தப் பணக்காரர் கள்..."

"இதைத் தடுக்கவேண்டும் என்றுகூட பாராளுமன்றத்திலே பேசினுர்களே..."

"ஆமாம் பட்டு! எதிர்க்கட்சிக் காரர்கள் பேசினுர்கள். ஆளுங் கட்சியான காங்கிரஸ் ஒப்புக்கொண்டால்தானே..."

"தெரியாதமாதிரி பேசுகிருளே இந்த பட்டு! எதிர்க்கட்சி சொல்கிற எதைத்தான் இந்த ஆளுங்கட்சி எடுத்துக்கொள்கிறது. இந்தியைப் புகுத்தி நாசம் உண்டாக்காதீர்கள் என்று எவ்வளவோ நியாயம் காட்டிப் பேசுகிருர்கள் எதிர்க்கட்சிக் காரர்கள்..."

"எந்த எதிர்க்கட்சி பேசுகிறது! மூச்சைப் பிடித்துக்கொண்டு முதியவர் ராஜகோபாலாச்சாரியார் பேசுகிருர். கட்சி என்ற அடிப்படையில் தி. மு. க. எதிர்க்கிறது..."

"ஆமாம்.....சட்டசபையிலேகூட இந்தி கள்ளிப்பால் என்று கருணுநிதி பேசினுராம்..."

"மந்திரி பதில் கூறினுரே இதற்கு! அதைப் பார்க்கவில்லேயா ஏமு!..."

"என்ன பதில் கூறினுர் இதற்கு மந்திரி?"

"இந்தி, கள்ளிப்பால் அல்ல; அது கழுதைப்பால் என்று முதலமைச்சர் பக்தவத்சலம் பேசினுர்"

"அட, ஆச்சரியமாக இருக்குதே பொன்னி! பக்தவத்சலமா இந்தியை இப்படி ஏசிப் பேசினுர், கழுதைப் பால் என்று..."

"ஏமு! இந்தியைக்கேவலப்படுத்த அவர் அப்படிச் சொல்லவில்லே,

கழுதைப்பால் என்று இந்தியைப் பாராட்டத்தான் பேசினுர்...''

"இது அதைவிட வேடிக்கையாக இருக்குதே பொன்னி! கழுதைப் பாலுக்குச் சமானம் இந்தி என்பது பெருமை தருகிற பேச்சா? போடா குரங்கே! என்ருல், அனுமார் என்ரு அர்த்தப்படும்.''

"எனக்கு, ஏமு! அதெல்லாம் தெரியாது. இந்தி கழுதைப்பால்—கழுதைப்பால் உடம்புக்கு நல்லது என்று வாதாடி இருக்கிருர் பக்த வத்சலம்...''

"சே! சே! இன்னெருதடவை அப்படிப் பேசாதே...''

"என்ன ஏமு! என்னை ஏசுகிருய். நானு சொன்னேன் இந்தி கழுதைப் பால் என்று. சொன்னவர் மந்திரி! அனுபவமுள்ள மந்திரி! பெரிய மந்திரி!...''

"அனுபவமுள்ள மந்திரியா...... எதிலே அனுபவம்? பாலிலே சிறந்த பால் கழுதைப்பால் என்று கண்டு பிடித்ததிலா...''

கழுதைப்பால் சிறந்தது என்று முதலமைச்சர் பேசிப் பேசி ஏன் பசும் பாலுக்காக அலைகிறீர்கள்? கழுதைப்பால் உடம்புக்கு ரொம்ப நல்லது என்று சிபார்சு செய்வாரோ என்னமோ...''

அது எனக்குத் தெரியாது பட்டு! ஒருசமயம் பக்தவத்சலம் அவர்கள் ரஷியா போயிருந்தபோது, ஒரு விருந்தில் ஒரு பெரிய கோப்பை நிறையப் பால் கொடுத்தார்களாம். சாப்பிட எண்ணியவர், இது பசும் பால்தானே என்று கேட்டாராம் ரஷிய அதிகாரியை. இல்லை! இல்லை! இது சுவையான பால்! ஒட்டகத்தின் பால்! என்ருராம் ரஷிய அதிகாரி...''

"என்னது! என்னது! ஒட்டகத்தின் பாலா...?''

"ஆமாம் ஏமு! ஒட்டகத்தின் பால் உடம்புக்கு நல்லது என்பது ரஷியர்களின் எண்ணம்; இவர் கழுதைப் பால் நல்லது என்று எண்ணுவது போல என்று வைத்துக்கொள்ளேன்...''

"கழுதைப்பாலே நல்லது என்ற கருத்து கூறும் முதலமைச்சர், 'மடக்கு மடக்கு' என்று ஒட்டகப் பாலைக் குடித்திருப்பார், இல்லையா பொன்னி!''

"அதுதான் இல்லை! வேண்டாம்! ஒட்டகப்பால் சாப்பிடுவது என்னமோபோல அருவருப்பாக இருக்கிறது என்று சொல்லிவிட்டாராம்.''

"பாரேண்டி அக்ரமத்தை! இவருக்கு ஒட்டகத்தின் பால் பிடிக்காது, அருவருப்பாக இருக்கும்; ஆனுல் கழுதைப்பால் உடம்புக்கு நல்லது என்று மற்றவர்களுக்குச் சிபார்சு செய்கிருர். நன்ருக இருக்கிறதே நியாயம். மக்களை அவ்வளவு கேவலமாக எண்ணுகிருர்...''

"அது எனக்குத் தெரியாதுபட்டு! இவர் மக்களை எப்படிக் கருதுகிருரோ தெரியாது; ஆனுல் கழுதையைக் கேவலமாகக் கருதவில்லை; முன்பு ஒருமுறை கழுதைகளின் தொகையே வரவரக் குறைந்துகொண்டிருக்கிறது; இது தவறு; கழுதைகளை வளர்க்க வேண்டும் என்று புத்திமதி சொல்லி இருக்கிருர்...''

"யார்....மந்திரியாரா......நன்ருக இருக்கிறது இவரோட போக்கு. கேட்கச் சகிக்கவில்லை...''

"உனக்குச் சகித்தால் என்ன சகிக்க முடியாவிட்டால் என்ன! அவர்தான் நாட்டுக்கே முதலமைச்சர்......அதை மாற்ற முடியுமா என்ன...?''

"மனப்பால் குடிக்கக்கூடாதடி பொன்னி! மனப்பால் கூடாது. மக்கள் மனம் வைத்தால், இவர் என்ன, இவரைவிட அசகாய சூரர்களாக இருந்தால்கூடக் கவிழ்த்துவிட முடியும்...''

"நீ என்ன, ரஷியாவிலே குருஷேவ் கவிழ்ந்துவிட்டாராமே அதைச் சொல்லுகிருயா...?''

"சேச்சே! அது மக்கள் செய்த வேலையா என்ன? குருஷேவின் கூட்டாளிகளே அவரைக்கவிழ்த்துவிட்டு, சேதியை மக்களுக்குச் சொன்னுர்கள்......நான் சொல்வது அப்படிப்பட்ட அரண்மனைப் புரட்சியை அல்ல. பொதுத் தேர்தலை மனதிலே வைத்துக்கொண்டு பேசினேன்...''

"தேர்தல் என்று சொன்னதும் கவனம் வந்தது. பொன்னி! மாதர் முன்னேற்ற சங்கத்தின் தேர்தலாமே, நாம் போகவேண்டாமா, புறப்படு புறப்படு...''

"அதென்னடிம்மா, மாதர் முன்னேற்ற சங்கம் உங்களுக்கு மட்டுந்தானு. ஏன் என்னைச் சேர்த்துக் கொண்டால் என்னவாம்...''

"தாராளமாக; சந்தோஷமாக எல்லோருமே போவோம். இன்றே ஏமு, சேரட்டும் சங்கத்தில்...''

'காஞ்சி' சந்தாவிகிதம்

ஆண்டு சந்தா	ரூ. 10—00
ஆறுமாத சந்தா	ரூ. 5—00

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்

நாகரிகம் முற்றிய நிலையினர் நாங்கள் என்று சொல்லிக்கொள்ளத்தக்க அமெரிக்கரிடையே ஒரு கறை உள்ளது. மக்கள் நிகர் என்ற மகத்தான கொள்கையை மதித்துப் போற்றுவோர் என்று அமெரிக்க மக்கள் அனைவரையும் குறிப்பிடல் இயலாது. தோலின் நிறம் மட்டுமே கண்டு தோற்றத்தால் மதிப்பிட்டு உயர்வு தாழ்வு பேசும் போக்கினராக ஒரு பகுதியினர் உள்ளனர். அவர்கள் நிறத்தால் கருத்த நீக்ரோ மக்களை அடிமைகளாக்கி வைத்திடவே விரும்புகின்றனர். அவர்களை ஒதுக்கியும் ஒடுக்கியும் நடத்த நினைக்கின்றனர்.

ஆனால் வெள்ளை நிறத்தோரில் பலர் — சான்றாண்மைமிக்க பலர் — அந்த மக்களை உயர்த்த வேண்டும் என்று பாடுபடுபவர்கள்தாம். ஆப்ரகாம்லிங்கன், கென்னடி போன்ற பெருமக்கள் அந்தப் பெருநெறியில் சென்று தங்கள் வாழ்வையும் அதற்கென்று ஈந்து வந்தனர், வருகின்றனர்.

வேற்று நிலையினராகிய அவர்கள் செய்யும் முயற்சி நீக்ரோ மக்கள் தங்களுக்குத் தாங்களே தேடிக்கொள்ளும் பலத்தினால்தான் வலுப்பெறும். அந்நிலையும் அங்கிருக்கிறது என்பதைக் காட்டும் வகையில் 'அடிமை' மக்களிடையே அருமைமிக்க தலைவர்கள் பலர் தோன்றுகின்றனர். அறிவு அனைவர்க்கும் பொது என்பதை அவர்கள் தங்கள் வாழ்வில் எடுத்துக்காட்டுகின்றனர். கலை உலகில், கல்வித் துறையில் எதிலும் தங்களால் தலைமையிடத்தைப் பெறமுடியும் என்பதை அவர்கள் செயல்படுத்திக் காட்டுகின்றனர்,

அப்படிப்பட்ட தலைவர்களில் ஒருவரே மார்ட்டின் லூதர் கிங் என்பவர்; டாக்டர் பட்டம் பெற்றவர் அவர். தான் தோன்றிய குலம் தழைக்க வேண்டும் என்று அயராது பாடுபடுபவர். நீக்ரோவரின் நல் வாழ்வுபற்றி அவர் பல அரிய நூல்களை எழுதியுள்ளார்.

'நாம் ஏன் காத்திருக்கக்கூடாது?' என்ற பெயரில் அவர் எழுதிய நீக்ரோவர் பற்றிய நூல் ஒன்று கடந்த திங்கள் இலண்டனில் வெளியிடப் பெற்றுள்ளது. அவருடைய தொண்டுகளைப் போற்றும் வகையில் இவ்வாண்டு (1964)க்கான நோபல் பரிசு (சமாதானத்துக்கெனத் தரப்படுவது) அவருக்குத் தரப்பட்டுள்ளது. நோபல் பரிசினைத் தோற்றுவித்த ஆல்பிரட் நோபல் என்பாரின் பிறந்த நாளான டிசம்பர் திங்கள் 10-ஆம் நாளன்று சுமார் ஒருஇலட்ச ரூபாய் மதிப்புள்ள அப்பரிசு அவருக்கு அளிக்கப்பட உள்ளது.

பரிசு பெறுவதற்காகப் பாடுபட்டவர் அல்லர் கிங் அவர்கள். ஆனால் அவருடைய பணியினைப் பாராட்டி பரிசு தந்துள்ளனர்,

மனிதத்தன்மை மலர வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர்களின் நெஞ்சம் மகிழும் வகையில் அமைந்திருக்கிறது அவருக்குக் கிடைத்திருக்கும் பாராட்டு.

அவர் உருவமே அட்டையில் உள்ளது.

அவருக்கு நமது உளம் நிறைந்த பாராட்டுக்களை உரித்தாக்குகின்றோம்.



ஏன் விழித்தார்!

தோரோடும் தெருவோரம், தளிருடன் தான்வாட
பொழுதெல்லாம் காத்திருந்து வெறும் கையோடு
போராடும் பசியாற்றும் அரிசியின்றி திரும்புகின்ற
இழிநிலைக் கஞ்சியவர் விழிக்கின்றாரா! இல்லைஇல்லை!

அடிக்கின்ற கொள்ளைக் கோரளவில்லை; அதனைத்
தடுக்கின்ற துணிவிந்த அரசுக்கில்லை என்றே
இடித்துரைக்கும் எதிர்தரப்பார் கூற்றுக் கஞ்சி
துடித்தவரும் விழிக்கின்றாரா! இல்லை இல்லை.

கறுப்பென்றார் கள்ளமென்றார் அனைத் தவரும்
இருக்கின்றாரே நம் மிடையே என்பதற்கா
பொறுப்பான பதவிகளில் வீற்றிருப் போர்
புலனடுங்கி விழிக்கின்றாரா இல்லை இல்லை.

வழி மாறிச் சென்றாலும் உய்வதற்கு
பதவி யென்ற காப்புண்டு என்றிருந்தார்
விழித்துவிட்ட மக்களினி விடுவாரா நம்மையென்று
அறுபத்தி யேழை யெண்ணி விழிக்கின்றாரே!

—அரிமழம் மதிவாணன்.

அவியல்

ரஷிய விண்வெளி வீரர் மூவர் புதிய வெற்றி ஈட்டினர். உலகம் வியந்தது. ஆனால் கிரஹங்களைச் சுற்றிப்பார்க்க இவ்வளவு கஷ்டப் படுவானேன், நம்ம கோயில் நவக்கிரஹ சன்னதியைச் சுற்றினால் போதாதோ என்று கேட்கிறார் வைதீக பிச்சுமணி.

○

ரஷிய அதிபராக இருந்துவந்த குருஷாவ் கீழே தள்ளப்பட்டு விட்டார். உலகம் இது கேட்டு திடுக்கிட்டது. ஆனால் ஜோதிடம் குமரகுருபர குருக்கள், காரணம் தெரிந்துகொள்ள வேண்டுமானால் ஜாதகத்தை அனுப்புங்கள்—ரூபா பத்தும் சேர்த்து என்று கூறுகிறார்.

○

பிரிட்டனில் தொழிற் கட்சி ஆட்சி அமைகிறது. முற்போக்காளர் மகிழ்கின்றனர்; ஆனால் 13 ஓட்டுகள் மட்டுமே அதிகம் என்று கூறத்தக்க நிலை இருப்பது கண்டு கவலை கொள்கின்றனர்.

○

சீனா அணுகுண்டு தயாரித்து வெடித்து பரிசோதனை நடத்திற்று; ஆதிக்க வெறி பிடித்த சீனாவின் போக்கை வெறுக்கும் நாடுகள் மிகுந்த கவலை கொண்டுள்ளன.

○

திருமதி விஜயலட்சுமி பண்டிட் கவர்னர் வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு, தேர்தலில் ஈடுபடுகிறார்; வெற்றி பெற்றுப் பாராளுமன்றம் நுழைந்தால், எந்த மந்திரியின் இலாகாவை அம்மையார் பறித்துக் கொள்வாரோ என்ற பீதி டில்லி வட்டாரத்தில் உலவத் தொடங்கிவிட்டது.

○

குருஷாவ் எங்கே இருக்கிறார்? எப்படி இருக்கிறார்? என்ற கேள்வி பிறந்திருக்கிறது! இதிலே என்ன சிக்கல்!

குருஷாவால் வெளியேற்றப்பட்ட மலடாவ், புல்கானின், காகினோவிச், போன்றவர்கள் எப்படி எங்கே இருக்கநேரிட்டதோ அது போலத்தானே குருஷாவுக்கும் என்று பதில் கூறுகிறார் நமட்டுச் சிரிப்புக்காரர்.

○

அர்ஜுனனைச் சுட்டதில், மார்பு வழி பாய்ந்த குண்டு முதுகு வழியாக வெளிவந்ததாகப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. குறி தவறாத இந்த அதிகாரியை, சீனப் படையைத் தாக்க அனுப்பி வைக்கலாமே என்கிறார் பாதுகாப்புத் துறையில் தொடர்புள்ள ஒரு நிருபர்.

○

அமெரிக்கா சென்றிருக்கிறார் எங்கள் அழகேசன் என்று பூரிக்கிறார் செங்கற்பட்டு வாசி.

எங்கள் சுப்ரமணியம் மணிலா போகிறார் என்று கூறி மகிழ்கிறார் கோவை வாசி.

○

பஞ்சத்தை நான் கண்ணால் பார்க்கவேண்டி இருக்கிறதே என்று ராஜாஜி உருக்கமாகப் பேசுகிறார். பஞ்சத்தைக் கூடப் போக்கிவிடலாம் ஆனால் ராஜாஜியின் பகையைப் போக்க முடியாதே என்று கூறி ஆயாசப்படுகிறார் ஆளும் காங்கிரசின் அடியார் ஒருவர்.

○

காஷ்மீரில் பிரதம மந்திரி சாதிக், தமது மந்திரி சபையில் சில புதியமந்திரிகளைச் சேர்த்துக் கொள்ளப்போகிறார் என்று பத்திரிகைச் செய்தி கூறுகிறது. மந்திரி வேலையைத் துறந்துவிட்டு கட்சி வேலை பாருங்கள் என்பது காமராஜர் திட்டம்; கட்சி வேலையை விட்டு விட்டு மந்திரி வேலைக்கு வாருங்கள் என்பது சாதிக் கண்டுபிடித்த கீமராஜ் திட்டம் போலும் என்கிறார் ஒரு கிண்டல்காரர்.

○

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தாம் ராஜினாமாச் செய்யப்போவதாக வெளிவந்த வதந்தி தவறு என்று தெரிவித்திருக்கிறார். அப்படியா! என்று கேட்டு மொரார்ஜி தேசாய்மூர்ச்சையாகிவிட்டிருக்க வேண்டுமே என்கிறான் குறும்புக்காரன்—நம்ம ஆபீஸ் பையன்.

○

கெனியா நாட்டு முதலமைச்சர் ஜோமோ கெனியாடா பெண்கள் தலுக்கு மினுக்குக்காக பணம் அதிகமாகச் செலவிடுவதைக் கண்டித்திருக்கிறார். ஏன் தெரியுமா, அவர் வயதான காலத்திலே புதிய ஒருவளைத் திருமணம் செய்துகொண்டார்; அவள் படுத்தும்பாடு சகிக்கவில்லைபோல இருக்கிறது என்று மூதாட்டி முனியம்மாள் முணுமுணுக்கிறதாகக் கேள்வி.

○

கன்னியாகுமரியிலுள்ள விவேகானந்தர் பாறையைப் பார்த்திட டாக்டர் சுகர்ணோ ஆவலாக இருக்கிறாராம். அவர்மட்டும் வர உத்தேசமா, அல்லது மலாஷியா மீது அவர் ஏவிவிடும் குரங்குப் படையையும் கூட அழைத்து வர விரும்புகிறாரா என்று கேட்கிறார், ஒரு பர்மா தமிழர்.

○

அரசியல் கட்சிகள் பெரிய கம்பெனிகளிடம் தேர்தல் நன்கொடை வாங்கக்கூடாது என்கிறார் காங்கிரஸ் பிரமுகர் கே. சந்தானம். ஆசாமி தன் காரியம் முடிந்துவிட்டது என்பதாலே, இப்படிப் பேசுகிறாரா என்று கேட்கிறார் ஒரு காங்கிரஸ் புதுமுகம்.

○

குடிஅரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் ஜாதி உணர்ச்சி ஒழியவேண்டும் என்று பேசி இருக்கிறார். தாராளமாக ஒழியட்டும், ஆனால் தேர்தலின் போதுமட்டும் வந்து போகட்டும் என்கிறார் ஒரு காரியவாதியான காங்கிரஸ்காரர்.

●

சின்ன காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "அல்லி" அச்சகத்தில், (உரிமையாளர்) சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.